Registered No. M. .378.

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.

தொகுதி 4. } 1914ஞ் மார்ச்சுமீ 15உ பிரமாதீசஞ் பங்குனிமீ 2உ { பகுதி 11

அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S., —பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ. 2 தனிப்பிரதி அணா 4

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.

(CONTENTS.)

பக்கம்.

1. தற்காலநிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர் 388
From the Editor—A. Rangaswami Iyer

2. காலஞ்சென்ற நமது பத்திராதிபர் பிரஹ்மஸ்ரீ ப. நாராயண ஐயரவர்களின் சரித்திரச் சுருக்கம்—P.N. நாகநாத ஐயர் 39[illegible]
A short sketch of the life of Mr P. Narayana Iyer, the late Editor } P.N. Naganathier.

3. அவதாரங்கள்—கே. கோடீசுவர ஐயர். 403
Avatars—K. Kotiswara Iyer.

4. ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்—M. சாமிநாதன். 409
Sri Ramakrishna Paramahamsa—M. Saminathan.

5. வரதக்ஷிணையால் வரும் தீமைகளும் ஸ்நேஹலதையின் ஆத்மத்யாகத்தைப்பற்றிய சில குறிப்புக்களும். } ம. கோபாலகிருஷ்ண ஐயர். 414
Evils of Bride-groom price and some reflections on Snehalatha's Suicide—M. Gopalakrishna Iyer.

காலஞ்சென்ற ப. நாராயணஐயரவர்கள் பிரசுரித்திருக்கும் தமிழ்ப் புத்தகங்கள்.

1.	பதஞ்சலியோக சூத்திரம்	1—0—0
2.	மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாரின் யோக உபந்யாஸங்கள்	0—12—0
3.	இயேசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்க முறைநூல்	1—0—0
4.	மனிதன் வமிசாவளியின் உண்மை	0—8—0
5.	பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும்	0—6—0
6.	இந்துமத தூஷணையின் பரிகாரம்	0—4—0
7.	ஸர்வஸமய ஐகமத்ய ஸாரஸங்கிரகம்	0—4—0
8.	ஔவையோகக்குறள் (தமிழினின்று ஆங்கில மொழிபெயர்ப்பு	0—4—0

மேற்கண்ட புஸ்தகங்கள் வேண்டுவோர் மதுரை பிரஹ்மஞான ஸபைப் பிரெசிடெண்டு அவர்களுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்

373

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 4. | 1914௵ மார்ச்சு௴ 15௳ பிரமாதீச௵ பங்குனி௴ ௨௳ | பகுதி 11

தற்கால நிலைமை.

சென்ற 1913 ம் ௵த்தில் பிரஹ்மக் ஞான சபையின் அபிவிருத்தியைக் குறித்த ரிப்போர்ட்டானது 341 பக்கங்களடங்கியவொரு பருத்த புஸ்தகம். சென்ற வருஷம் கோர்ட்டு விவகாரங்கள் நடந்த வருஷமாயினும் ஆத்ம வித்தையைக் கைக்கொண்ட பிரஹ்மக் ஞான சபைக்கு கை கலக்கும் யுத்தமும் அல்லது கோர்ட்டுகளில் வாக்கினால் நடத்தப்படும் போரும் இயற்கைக்கு விரோதமான பிரவிர்த்திகளான போதிலும், 1913 ம் ௵த்திய ரிப்போர்ட்டானது தைரியத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கக் கூடியதா யிருக்கிறது.

* * *

உலகத்தில் பொருதலிருந்தும் தாக்குதலிருந்தும் சமாதானமும் அபிவிருத்தியும் உண்டாவதை சரித்திரத்திலுள்ள பல உதாரணங்கள் மூலமாக அறிகின்றோம். இந்தியாவானது தற்காலத்தில் சமாதானத்தை யடைந்து ஒரு பலமான ஏக அரசாட்சியின் கீழ் அமைந்து அதில் வசிக்கும் வெவ்வேறு மதஸ்தர்களும் ஜாதியார்களும் அவரவர்களுடைய வேறுபாடுகளையும் துவேஷங்களையும் சிறு

கச் சிறுகமறந்து ஐகபத்தியத்தை கைக்கொண்டு நமது தேசம் உலக முழுதும் பரவிச்செழித் தோங்கும் ஏக சக்ராதி பத்தியத்தில் ஒரு கௌரவமான ஸ்தானத்தை வருங் காலத்தில் வகிக்கத் தக்க பாத்தியத்திற்கு விதை எப்பொழுது போடப்பட்டதென்று நாம் யோசிக்குங் கால் 18-ம் நூற்றாண்டில் இந்தியாவில் மஹாராஷ்டிரர்களும் மகமதியர்களும் வெவ்வேறு ஐரோப்பிய வர்த்தகக் கூட்டத்தார்களும் கை கலந்த ரணகளங்களில் போடப்பட்டதென்றே நாம் சொல்லத் துணியலாம்.

***

இந்த தத்துவத்தை வற்புறுத்துவதற்காக கௌரவர்களும் பாண்டவர்களும் அவரவர்களுடைய சேனைகளும் யுத்த வீரர்களும் போர்புரிய சன்னத்தர்களாக இருக்கும் பொழுதும் 18 நாள் அவர்கள் கொடிய யுத்தம் செய்வதற்கு முன்னும் அம் முயற்சிக்குப் புறம்பாகிய ஆத்ம ஞானத்தைப் புகட்டுகின்ற யோக சாஸ்திரம் என்கிற பகவத்கீதையை ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்தருளினரென்று சொல்லப்படுகிறது.

***

கிரீஸ் தேசம் மேம்பாட்டை யடைந்தது பாரஸீகர்களுக்கும் அதென்ஸ் (Athens) நகரத்தார்களுக்கும் நடந்த மராதான் (Marathan) முதலிய யுத்தங்களினின்றும், ஐரோப்பியர்களுடைய அபிவிருத்தியானது டூரேஸ் (Battle of Tours) யுத்தத்தினின்றுமேற்பட்டதென்றும் American War of Independence என்னும் யுத்தத்தைத் தொடர்ந்து வட அமெரிக்கா தேசத்து ஐக்கிய மாகாணங்களின் மேல் நோக்கிச் செல்லுகின்ற க்ஷேமம் ஏற்பட்டதென்றும், மெடினா (Medina வுக்கு அடுத்துநடந்த யுத்தகளத்தினின்று இஸ்லாம் மதம் ஸ்தாபிக்கப்பட்டதென்றும் சில ஆசிரியர் கூறுவர்.

***

ஆகையால் சென்ற இரண்டு வருஷங்களாக பிரஹ்மஞான சபையின் மீது துவேஷம் வைத்தவர்களுடைய விரோதமான செய்கைகளால் நம்முடைய சபையினுடைய அபிவிருத்தி அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டுவதற்கு நமது சபையின் சென்ற வருஷத்து ரிப்போர்ட்டேபோதுமான சாக்ஷியமாகும். சென்ற

வருஷத்துக்கடைசியில் 23 தேசப்பிரிவுகளில் 23நாஷனல் ஸொஸைட்டிகளாக (National Societies) நம்முடைய சபை வேலை செய்து கொண்டு வருகின்றது. சென்ற வருஷத்தில் அவ்விதம் கடைசியாக நார்வே (Norway) தேசத்தில் ஒரு நாஷனல் ஸொஸைட்டி ஸ்தாபிக்கப்பட்டது. மொத்தத்தில் பிரஹ்மக்ஞானசபை ஸ்தாபிக்கப்பட்டுள்ள 1875ம் ஹுமுதல் சென்ற வருஷக் கடைசி வரையில் பலதேசங்களிலும் 1483 கிளைச் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. சென்ற வருஷத்தில் மட்டும் 78 நூதன கிளைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.

* * *

நம்முடைய சபையில் சென்ற வருஷம் முடிவுவரையில் 22,744 அங்கத்தினர்கள் (Members) சேர்ந்திருக்கிறார்கள். அவர்களில் சென்ற வருஷத்தில் நூதனமாய்ச் சேர்ந்த அங்கத்தினர்களின் சங்கியை 4073 ஆகிறது. அந்த 4073 ல் நமது இந்தியாவில் சென்ற வருஷத்தில் நூதனமாய்ச் சேர்ந்தவர்கள் 1071 ம், அமெரிக்காவில் அவ்விதம் நூதனமாய்ச்சேர்ந்தவர்கள் 777 ம், இங்கிலாந்து வேல்ஸ் தேசங்களில் 453 ம், பிரான்ஸ் தேசத்தில் 237 ம், ஸ்வீடன், நார்வே, டென்மார்க்கு இந்த தேசங்களில் 179 ம், ஹாலண்டு பெல்ஜியம் தேசங்களில் 156 ம், ஆஸ்திரேலியாவில் 140 ம், குயூபா நாஷனல் ஸொஸைட்டியில் 117 ம் ஆகின்றன. இவ்விதமாக அங்கத்தினர்கள் சென்ற வருஷத்தில் அதிகரித்திருக்கிறபடியாலும் இந்தியாவில் இவ்விதமாக ஏற்பட்ட அபிவிருத்தியானது சென்ற வருஷத்திற்கு முந்தின வருஷங்களில் உண்டானதைக் காட்டிலும் அதிகமாக இருத்தலாலும் பிரஹ்மக் ஞான சபையானது தழைத்தோங்கி மேன்மேலும் பல தேசங்களிலும் பலப்பட்டு வருவதானது துலங்குகின்றது.

* * *

பிரஹ்மக்ஞான சபைக்கு சொந்தமாகிய சொத்துக்கள் ரூ 6,96,998—1—8 மதிப்புள்ளதாயும் சென்ற வருஷத்தில் ஏற்பட்டவரும்படி ரூ. 68,331—9—10ம் ஏற்படுகிறது.

* * *

சென்ற வருஷத்தில் நம்முடைய சபைக்கு விரோதமாகச் சிலர்கள் விவகார ரூபமாகவும் சமாசாரப் பத்திரிகைகள் மூலமாகவும்

முவேஷத்தைக் காட்டியும் சபையானது அபிவிருத்தி யடைந்திருக்கிறதை நாம் பார்க்கிறோம். ஐரோப்பாக் கண்டத்தில் ஜெர்மன் நாஷனல் ஸொஸைட்டிக்கு காரியதரிசியா யிருந்த (Mr. ஸ்டைனர் Steiner) என்பவர் உதய நக்ஷத்திர சங்கத்தின் கோட்பாடுகளை சகிக்காதவராய் அச் சங்கத்தின் அங்கத்தினர்கள் ஜெர்மன் நாஷனல் ஸொஸைட்டியை சேரக் கூடாதென்று அபிப்பிராயத்தைக் கைக் கொண்டு அவர்களை விலக்க ஆரம்பித்தார். பிரஹ்மக்ஞான சபை சகோதரபாவம் (Brotherhood) என்ற தத்துவத்துக்கு விரோதமில்லாத எவ்வித கொள்கைக்கும் இடம் கொடுப்பதால் Mr. ஸ்டைனரும் (Steiner) அவரைச் சேர்ந்தவர்களும் அபிப்பிராயபேதத்தை உத்தேசித்து சில மெம்பர்களை ஜெர்மன் நாஷனல் ஸொஸைட்டியிலிருந்து விலக்கப் பிரயத்தனப்பட்டதானது பிரஹ்மக்ஞானஸபையின் முக்கியமான கொள்கைக்கு நேர் விரோதம். அதின்பேரில் பிரஹ்மக்ஞானசபையின் அக்கிராஸனாதிபதியவர்கள் Mr. ஸ்டைனருடையவும் அவரைச்சார்ந்தவர்களுடையவும் ஜர்மன் நாஷனல் ஸொஸைட்டியை ரத்துசெய்து அதின் ஸ்தானத்தில் வேறொரு ஜர்மன் நாஷனல் ஸொஸைட்டியை ஸ்தாபித்தனர்.

* * *

ஷை Mr. ஸ்டைனரும் அவரைச் சார்ந்தவர்களும் பிரஹ்மக்ஞான சபையிலிருந்து விலகி ஜீவஞான சபை யென்று (Arthroposophical Society) ஒரு சபையை ஏற்படுத்திக் கொண்டார்கள். Mr. ஸ்டைனரைச் சார்ந்தவர்கள் ஜெர்மனி தேசத்தில் 2447 மெம்பர்களும் ஸ்வீடன் நார்வே டென்மார்க்கு இந்த தேசங்களில் 225 மெம்பர்களும், ஹாலண்டு, பெல்ஜியம் தேசங்களில் 210 மெம்பர்களும், பிரான்ஸ்தேசத்தில் 52 மெம்பர்களும், இத்தாலிதேசத்தில் 3 கிளைச்சங்கங்களும், பின்லாண்டு (Finland) நாஷனல் ஸொஸைட்டியில் 60 மெம்பர்களும் அப்படி விலகிக்கொண்டார்கள். அவர்கள் அப்படி விலகிக்கொண்டபோதிலும் சென்ற வருஷத்திற்கு முந்தின வருஷத்தைக் காட்டிலும் சென்ற வருஷத்தில் பிரஹ்மக்ஞான சங்கமானது உலகத்தில் அதிகமாய்ப் பாவிபலத்தை அடைந்திருக்கிறது.

உலகத்திலுள்ள பிரஹ்மக்ஞான சங்கங்களின் பல பிரவிர்த்திகளைக்கவனித்துப்பார்க்குங்கால் சாதாரணமாய்க்காணப்படும் முயற்சிகளாகிய மீட்டிங்குகள், பிரசங்கங்கள், பத்திரிகைகள் பிரசுரம் செய்தல், சஞ்சிகைகள் கிரந்தங்கள் வெளிப்படுத்துதல் இவைகளைத் தவிர் சில விசேஷமுயற்சிகள் நாம் கவனிக்கத்தக்கவைகளாகத்தோன்றுகின்றன. முதலாவது இந்தியாவில் (Theosophical Educational Trust) என்னும் வித்தியாபிவிருத்திசபை ஸ்தாபிக்கப்பட்டு தற்காலத்தில் கோரக்புரத்தில் ஒரு காலேஜ் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டும், அதேமாதிரி காசியிலும், கயையிலும் காலேஜ்கள் ஸ்தாபிப்பதற்கு நிலம் முதலிய ஸாதனங்கள் அடையப்பட்டும், மதனபள்ளியில் ஓர் காலேஜ் ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் செய்யப்பட்டும் காசி, மதனபள்ளி, பழைய பாடலிபுரமாகிய பாங்கிபுரம், புரோடட்டேர் முதலிய ஊர்களில் சிறுவர்கள் வாசிக்கத்தக்க வித்யாசாலைகளும் காசி, கும்பகோணம், மதுரை முதலிய ஊர்களில் பெண்கள் வாசிக்கத்தகுந்த பள்ளிக்கூடங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. தவிரவும் சென்னையில் நடத்தப்படுகின்ற பஞ்சமர்களுக்கு ஏற்பட்ட ஐந்து பள்ளிக்கூடங்களும் மேற்சொல்லிய டிரஸ்டைச் சேர்ந்துவிட்டன. மேற்சொல்லிய வித்யாலயங்களில் கற்கும் மாணாக்கர்களுக்கு வைதிக லௌகிக வித்தையையும் அதின்மூலமாய் விவேகத்தையும் ஒழுக்கத்தையும் புகட்டுதலே முக்கிய நோக்கமாம்.

***

இலங்கைத் தீவில் இருக்கும் காலேஜ் பள்ளிக்கூடங்களையும் வகித்து மேல் பார்த்து வருவதற்காக (Buddhist Educational Association) என்ற பௌத்த வித்தியாபிவிருத்தி சங்கமானது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் பிரஹ்மக்ஞானசங்க மெம்பர்களின் முயற்சியால் இலங்கையில் 230 வித்யாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. கொழும்பு கண்டி காலி முதலிய 3 முக்கிய நகரங்களில் காலேஜ்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மேற்சொல்லியவித்தியாசாலைகளின் வருஷவரும்படி ரூபா10,3,218 ஆகின்றது. அந்த வித்யாசாலைகளின் மாணாக்கர்களின் சங்கியை 37,505 ஆகிறது. ஆனாலும் மொத்த மாணாக்கர்கள் 110353 ஆகிறபடியாலும் அவர்களில் பெரும் பான்மையோர் கிறுஸ்துவ பாதிரிகளுடைய

பள்ளிக்கூடத்திற் சென்று தங்களுடைய சொந்த மதமாகிய பௌத்தமதத்தில் உள்ள அபிமானத்தைக் கெடுக்கக்கூடிய கல்வி கற்று வருவதால் இந்த அபாயத்தினின்றும் அவர்களை விடுவிக்க இன்னும் அநேக பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்க முயற்சிக்கவேண்டியது அவசியமாயிருக்கின்றது. ஸிம்ஹிலத்தீவில் வித்தை புகட்டும் பிரவிர்த்தியில் இதுவரை செய்யப்பட்டிருக்கும் முயற்சிகளை நோக்கின் நம் தேசத்தில் பிரஹ்மஞானஸபை மெம்பர்கள் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன.

* * *

இங்கிலாந்தில் பிரஹ்மஞ்ஞான சங்கத்தில் கலைகளில் அபிமானமுள்ளவர்கள் Brotherhood of arts என்னும் ஓர்சபை யேற்படுத்தியிருக்கிறார்கள். நாடகம், சங்கீதம், சித்திரவேலை, சிற்பம் முதலிய கலைகளின் தத்துவம் ஈசுவரனுடைய ஒரு அம்சமாகிய மனதை பிரியப்படுத்துகிற சௌந்தர்யம் அல்லது அழகு என்ற குணத்தை வெளிப்படுத்துதலேயாம். அந்த சௌந்தர்யம் அல்லது அழகு என்ற குணத்தை கீழ்நோக்கிய இந்திரியங்களின் அநுபவத்திற்கு சாதனமாகச் செய்யாமல் ஈசுவரனை வழிபடுதலாகிய மேல் நோக்கும் பக்தி, ஞானம் இவைகளுக்கு அநுகுணமாகச் செய்வதையே முதன்மையாகக் கைக்கொண்டு இந்தச் சபையானது எளியவர்களுக்கும் மேற்சொல்லிய கலைகள் மூலமாகத் தோன்றும் ஈசுவரனுடைய சௌந்தர்யத்தை எடுத்துக்காட்டி அவர்களுக்கு ஒரு மேம்பாட்டைக் கொடுக்கமுயன்று வருகின்றது. அதற்கு மெம்பர்களா லெழுதப்பட்ட 2 நாடகங்களை ரவுன் டேபில் (Round table) என்ற சங்கத்தைச் சேர்ந்த சிறுவர்கள் நடித்தார்கள்.

* * *

நியு ஸீலண்ட் (New Zealand) என்னும் தேசத்தில் பிரஹ்மஞ்ஞான காலேஜாகவும் ஆசிரமமாகவும் உபயோகிப்பதற்காக 110 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலம் கொடுக்கப்பட்டு அதை மேற்சொல்லிய உத்தேசம் நிறைவேறுவதற்காக விருத்திசெய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

* * *

1915-ம் வருஷத்தில் பிரான்ஸ் தேசத்தில் பாரிஸ் நகரத்தில் உலகத்திலுள்ள எல்லா பிரஹ்மஞ்ஞான சங்கங்களுக் கெல்லாம்

பொதுவாகிய World Congress என்றமகாசபையானது முதல்முதலாக கூடப்போகின்றது. அதின் அக்கிராஸனத்தைவகிக்க மாதுஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அந்த சபைக்கு உலகத்திலுள்ள பலதேசங்களிலிருந்தும் ஏராளமாகவரும் பிரதி நிதிகளுக்குத் தக்கபடி உபசாரம்செய்து அனுப்புவதற்கும் அதற்கு முன்னடியே அவர்களுடைய Head Quarters ஐ முடிப்பதற்கும் முயன்று வருகிறார்கள்.

*
* *

இட்டாலி தேசத்தில் வியாதிகளை சூக்ஷ்ம சக்திகளால் சொஸ்தம் செய்ய நூதனமாக (League of Healers) என்ற ரோகநிவர்த்தகர்களின் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. சிலதேசங்களில் சிலமெம்பர்கள் சேர்ந்து Summer School, Winter School என்றும் சில மாசங்களில் கூடி பிரசங்கங்கள் மூலமாயும் கிரந்தங்கள் வாசித்தல் மூலமாயும் இதரவிதமாயும் அவர்களுடைய அபிவிருத்தியைக்கவனித்து வருகிறார்கள். இவ்விதம் ஜெர்மனி, பின்லாண்டு, தேசங்களில் நடத்திவந்திருக்கிறார்கள். ருஷியா தேசத்தில் மெம்பர்களுக்காக Sanatorium என்ற சுகத்திற்குரிய ஒரு ஸ்தானத்தைஏற்படுத்த முயன்று வருகிறார்கள்.

*
* *

பிரஹ்மக்ஞானசபைக்கு விரோதமாக வேலைசெய்து வந்தவர்களில் சென்னையிலுள்ள சில பாதிரிகளையும் இந்துக்களையும் தவிர உலகத்தில் இன்னும் சிலர்களை நாம் குறிப்பிடலாம்.

*
* *

ஸ்வீடன், பின்லாண்டு, ஆஸ்திரியா, உலாந்த இந்தியாவாகிய ஜாவாமுதலிய் தீவுகளில். கிருஸ்துவ பாதிரிகளுடைய துவேஷமும், ருஷியா தென் ஆபிரிக்கா இந்த தேசங்களில் அந்த தேசங்களின் தற்கால தேசநிலைமையும் நம்முடைய பிரஹ்மக்ஞான சங்கத்திற்கு எதிரிடையாக வேலைசெய்தன. ஆனல் இவைகள் நம்முடைய சங்கத்திற்கு மூல ஆதாரமாகிய மகரிஷிகளின் அநுக்கிரக சக்திக்கு எம்மாத்திரமென்பது அதை கொஞ்சமேனும் தெரிந்துகொண்டவர்களுக்கு நன்றாகப் புலப்படும். பர்மா தேசத்தில் லோககுரு என்ற

பரமாசாரியர் சமீபகாலத்தில் தோன்றப்போகிறார் என்ற விஷயத்தைக்குறித்து பிரஹ்மஞ்ஞான சபையில் சம்பந்தமில்லாத ஒரு பௌத்த பிக்ஷுவானவர் பகிரங்கமாக பிரசங்கம் செய்து வருகின்றனர்.

* * *

இவ்விதமாக உலகத்தில் சென்ற வருஷத்தில் பிரஹ்மஞ்ஞான சபையின் அபிவிருத்தியானது உற்சாகத்தைக் கொடுக்கத் தக்கதாயும் நம்முடைய சபையானது மகரிஷிகளின் அனுக்கிரகத்திற்கு பாத்திரமாயிருத்தலைக் காட்டத்தக்கதாயும் இருக்கின்றது.

* * *

நம்முடைய சபையின் அக்கிராசனத்தை 1907ம்-வரு ஜுலை-மீ முதல் வகித்துவருகிற மாதாஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையார் அடுத்த ஜுலை மீத்தில் 7 வருஷவாயிதா முடிவு பெறுகிறபடியால் அந்த ஸ்தானத்திலிருந்து விலகிக்கொள்கிறார்கள். அதற்கு முந்தியே நூதன அக்கிராசனாதிபதி தேர்ந்தெடுக்கப்படவேண்டியபடியால் அவர்களே அந்த ஸ்தானத்திற்கு ஜெனரல் கவுன்ஸிலால் பிரேரேபிக்கப்பட்டு மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்களென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. அவரைத்தவிர தற்காலத்தில் அந்த ஸ்தானத்தை அவரைப்போல வகித்துப்பார்க்கக்கூடியவர்கள் ஒருவருமில்லையென்று நாம் சொல்லலாம். அவர்கள் ஆயுசுவரை அக்கிராசனம்வகிக்கவேண்டும் என்ற பலர்களுடைய வேண்டுகோளை அடுத்த எலக்ஷனுக்குமுன் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்பது, அவருடைய அபிப்பிராயம்.

* * *

ஸ்ரீவில்லிபுத்தூரில் நாளிது-மீ 20, 21, 22 உகளில் பாண்டியநாடு பிரஹ்மஞ்ஞான கான்பிரன்ஸ் சபை கூடுகின்றது. ஸ்ரீமான் B. P. வாடியா அக்கிராஸனம் வகிக்கிறார். ஸ்ரீவில்லிபுத்தூர் நண்பர்களும் அந்தசபை சரியாக நடைபெறுவதற்கு தகுந்த முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் ஜில்லாக்களிலிருந்து அநேகம் மெம்பர்கள் அந்த புராதன ஸ்தலத்திற்குச் சென்று அந்தசபையில் வீற்றிருந்து அது பூரணமாய் முடிவு பெறத்தக்க முயற்சி எடுத்துக்கொள்வார்களென்று நாம் நம்புகிறோம்.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

காலஞ்சென்ற நமது பத்திராதிபர் பிரஹ்மஸ்ரீ

ப. நாராயண ஐயரவர்களின்

சரித்திரச் சுருக்கம்.

381

(331-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவர் 1903 ௵த்தில் வக்கீல் தொழிலை நிறுத்திக்கொண்டனர். அப்பால் தான் ஐயரவர்கள் அதிக ஊக்கத்துடன் வேலை செய்பவராகப் பிரகாசித்தார். பிரஹ்மக்ஞான மந்திரத்திற்குப் பொருளுதவி பெறுதற்கு, வெயில், மழை, சுகதுக்கம், மெய்வருத்தம், மனவருத்தம் ஒன்றையும் பாராமல் ஊர் ஊராய்ப் போய்ப் பொருள் சேகரித்து பிரஹ்மக்ஞானமந்திரத்தை விருத்திசெய்தார். பெண்கள் வித்தையின் அபிவிருத்தியின் பொருட்டு பிரஹ்மக்ஞான ஸபையைச் சேர்ந்ததாக ஸ்ரீ மீனாக்ஷீ வித்யாசாலை என்னும் பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்ததில் முக்கியஸ்தராயிருந்தார். மதுரை பிரஹ்மக்ஞான மந்திரத்தில் வாரந்தோறும் சபை கூட்டிவைத்து ஏதேனும் ஸத்கிரந்தங்களைப் படிக்கும்படி செய்துவந்தார். பெரிய மஹான்களாயும் வித்பன்னர்களாயுமுள்ளவர்கள் மூலமாய் பிரஹ்மக்ஞான மந்திரத்தில் பிரஸங்கங்கள் செய்வித்து ஜனங்களை ஆநந்திக்கும்படி செய்தார். பிரஹ்மக்ஞான ஸங்கம் விஷயமாய்ப் பணத்தைப் பணமாய்ப் பாராமல் ஆயிரக்கணக்காய்க் கைவிட்டுச் செலவு செய்து, தியாஸபி மதுரையில் வேரூன்றி நிலைத்திருக்கும்படி செய்த மஹானுவரிவர். இதுவன்றி பிரஹ்மக்ஞான ஸபையின் வருஷாந்தர கன்வென்ஷன் என்ற மஹா ஸங்கத்திற்கு அநேகமாய்ப் பிரதி வருஷமும்போய் ஆநந்தித்திருக்கிறார். காசிமாநகரில் கூடிய கன்வென்ஷன்களில் இரண்டுதரம் ஆஜராயிருந்திருக்கின்றார். அடையாற்றில் கூடிய கன்வென்ஷன்களிலிருந்தது கணக்கில்லை. இவர் மதுரை பிரஹ்மக்ஞான ஸபையின் பிரஸிடெண்டாயிருந்தார். இவர் இறந்தநாள் சாயங்காலந்தான், புதுவருஷத்திற்கு பிரஹ்மக்ஞான ஸபையின் அக்கிராசநாதிபதி முதலிய உத்யோகஸ்தர்களை நியமிக்க வேண்டிய திநமாக விருந்தது. சில வருஷங்களில் லாட்ஜ் இன்ஸ்பெக்டர் என்னும்உத்யோகம் வகித்து ஊர் ஊராய்ப் போய், பிரஹ்மக்ஞாந சம்பந்தமாயும், ஹிந்துமத ஸம்பந்தமாயும் பிரஸங்கங்கள்

செய்தும் கிளைச்சங்கங்களேற்படுத்தியும் நன்மையைப் பரவச்செய்தார். இவர் உடற்கூறு சாஸ்திரம், வானசாஸ்திரம், ஔஷதி சாஸ்திரம் தத்துவ சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களின் உண்மைகளைக் கற்றறியாத ஸ்திரீ பால விருத்த ஸமூகங்களுக்குங்கூட நன்கு விளங்கும்படியாய் ஊஞராய் புகைப்படக் காட்சியின் (Magic Lantern Exhibition) மூலமாய் ஞானத்தைப் புகட்டியவர். பிரஹ்மஞான ஸபையிலும் அதற்கு ஆதாரபூதர்களாயுள்ள மஹாத்மாக்களிடத்திலும் அசைக்கமுடியாத நம்பிக்கையும் பக்திசிரத்தையுமுள்ளவர். ஸ்ரீமதி அன்னிபெஸண்டு அம்மையாரவர்களிடத்திலும், ஸ்ரீமான் லெட்பீட ரவர்களிடத்திலும் அளவுகடந்த அன்பும் பக்தியுமுள்ளவர். இவர் போன்றவர் தியாஸபியில் முழு நம்பிக்கை வைத்துப் பக்தி சிரத்தையாய் அநுஷ்டித்துவந்ததால், தியாஸபி செழித்து விருத்தியாவதில் ஸந்தேஹமில்லையென்றே கூறலாம். மதுரை நகரத்தில் நல்லொழுக்கத்தையும் நற்குணத்தையும் ஸ்தாபித்து ஜநங்கள் நல்வழிப்படும்படி செய்த மஹானிவரே. இவர் உள்ளும் புறமும் ஒன்றாய்ப் பிரகாசித்து மநத்திலுதித்ததை வாய்பேசவும், வாய்சொன்னபடி மெய்செய்யவும், மநோவாக்கு காயங்களால் எப்போதும் நன்மையைச் செய்துகொண்டிருந்த இவர் சரிதையைப் பார்த்து ஜநங்கள் நல்லொழுக்கத்திற்கு திருஷ்டாந்தமாய் இவரைக் கைக்கொண்டார்கள். வியபிசாரிகளான நாட்டியப்பெண்கள் பாடும்படி யேற்படும் கச்சேரிகளுக்குப் போவதில்லையென்று விரதம் வைத்தவர் இவர். இத்தீய நடையுள்ள தாஸிகளை வீட்டுக்கழைத்துச் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் பழக்கம் உண்டுபண்ணுவதாலுண்டாகும் தீமைகளைப்பற்றிப் பன்முறை கண்டித்துப் பேசியும், தாமும், இப்போது மதுரை காலேஜ் பிரின்ஸ்பாலாயிருக்கின்ற மகா-ா-ா-ஸ்ரீ ஏ. இராஜாராமையரவர்களும், காலஞ்சென்ற ஆனரபில் எம். வெங்கடராமைய ரவர்களும் பத்திராதிபர்களாயிருந்து நடத்திய மதுரை மெயில் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் ஷெ அபிப்பிராயத்தை நன்கு வெளியிட்டும் வந்தார்கள். 'அநுஷ்டாநத்தில் தம் வீட்டில் அநேக திரவியம் செலவழித்துச் செய்த சுபகாரியங்களில் நாட்டியப்பெண்களின் ஆடல்பாடல்களை நீக்கியொழி த்தமையாலும், கொஞ்சங் கொஞ்சமாய் இத்துராப்பியாஸமானது

மதுரையில் நின்றுபோய்விட்டதாகவே சொல்லலாம். மதுரை ஜில்லாவிற்கே உயர்ந்த லக்ஷியங்களைப் பற்றிய மனோபாவங்களையும் (High Ideals) பரிசுத்தமான ஒழுக்கத்தையும் (Purity of Life) ஜனங்கள் கைக்கொள்ளும்படி செய்திருக்கிறார். நந்தேசத்திய மடாலயங்களையும், தேவஸ்தானங்களையும், மற்றும் தர்மசத்திரங்களையும், சாலைகளையும் நன்கு பாதுகாத்துச் சீர்திருத்தம் செய்து நமது ஸநாதனதர்மம் தழைத்தோங்கும் பொருட்டு, இவர் தர்மரக்ஷணஸபை என்னும் ஓர் பெரிய ஸபையை ஸ்தாபித்ததில் முக்கியஸ்தராயிருந்தும், அதற்குத் தீவ்ரமாய் வேலை செய்யும் முக்கிய காரியதரிசியாகவுமிருந்து, சபை யேற்பட்ட சொற்ப காலத்திற்குள் அதிசயிக்கும்படியான பெரும் வேலை செய்திருக்கிறார். தேவாலயங்களையும் மடாலயங்களையும் சீர் திருத்த வேண்டிய விதங்களைப்பற்றி பல ஊர்களிலும் பல சமயங்களிற் பேசியும் துண்டுப் பத்திரிகைகள் பிரசுரித்து மிருக்கிறார். இராமேசுவரம் தேவஸ்தானம் விஷயமாய் அட்வகேட் ஜெனரலாயிருந்த கனம் பி. எஸ். சிவஸ்வாமி ஐயரவர்களைக்கொண்டு ஒரு தக்க ஏற்பாடு (Scheme) செய்வதற்காக வியாச்சியம் போடும்படி செய்து அதை ஸமாதானமாய் முடித்து ஓர் ஸ்கீம் ஏற்படுத்தி இப்போது ஒரு டிரஸ்டி மூலமாய் மதுரையில் ஆபீஸ் வைத்துக்கொண்டு, ஷை தேவஸ்தானம் விசாரணை நன்றாய் நடக்கும்படியான ஏற்பாட்டைச் செய்தவர்களில் முக்கியஸ்தர் இவரே. ஆபத்திலகப்பட்டு வருந்தும் எவர்க்கும் அபயப் பிரதானங் கொடுத்து மனமகிழ்ச்சியுடன் நீக்கிவிடும் இயல்பினர். ஒருசமயம் மதுரையில் ஹிந்து டிராக்டு ஸொஸைடீ உபந்யாஸகரான ஸ்ரீமான் பால சுப்பிரமணிய பிள்ளை என்பவர், மெயின் கார்டு (Main Guard St.) தெருவில் பிரஸங்கம் செய்துகொண்டிருந்ததில், கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய்ப் பேசிக் கலகம் உண்டாக்கினாரென்று, அவரைப் போலீஸ்கார் பிராஸிக்யூஷன் செய்து வருத்தப்படுத்தியதில் 'பயப்படாதீர்' என்று அவருக்கு அபயமளித்து அவருக்கு யாதொரு தீங்கும்வராமல் அவரைப் பாதுகாத்துக் கொடுத்து யதாபூர்வமாய்ப் பிரஸங்கம் செய்யும்படி உதவிசெய்தார்.

இவர் எல்லாமதங்களிலும் ஸமபுத்தியுள்ளவர். தியாஸபியின் கருத்தே அதுதான். ஆனால் அவனவனுக்கு ஏற்பட்ட மதத்தை விட்டுவிட்டு அந்ய மதத்திற்குப் போகக் கூடாதென்பது இவர் கொள்கை. ஒரு மதத்திலுள்ளவர் மற்றொரு மதத்தை யிகழ்ந்து பேசவுங் கூடாது என்பதும் இவர் கருத்து. இவர் ஹிந்துமத ஆசாரங்களை வழுவாது கைப்பற்றினவர். உஷக் காலத்திலெழுந்து பிராதஸ்நாநம் ஆனபின்பு ஸந்தியாவந்தனங்களை முடித்துக்கொண்டு தியானஞ்செய்து, பிறகு நித்ய வேலையைத் தொடங்குவார். ஸந்தியாவந்தனத்தைக் காலத்தில் செய்து முடிக்கவேண்டிய திடமான கொள்கையுள்ளவர். வேத கோஷத்தை சிரவணம் செய்வதில் மனஞ்சலியாதவர். ஒவ்வொரு வருஷமும் மதுரையில் நடத்தப்பெறும் வெண்தாமரைநாளில் (White Lotus Day) வேதப் பிராஹ்மணர்களைக்கொண்டு உபநிஷத்துக்களைப் படனம் செய்யும்படி செய்தபின்னர், மற்றக்காரியங்களை நடத்துவதைக் கண்ணுற்றிருக்கிறோமல்லவா? மதுரையில் ஜகத்குரு ஸ்ரீ சிருங்ககிரி ஸ்வாமிகளின் ஆதரவில் நடைபெற்று வருகிற தர்ம சாஸ்திர ஸபையில் பிரஸிடெண்டாயிருந்து ஷை ஸபையின் அபிவிருத்திக்காக மிக உழைத்திருக்கிறார்.

இவருக்குத் தமிழ்ப் பாஷையிலும், தமிழ் நூல்களிலும், அதிக பாண்டித்யமும், அவைகளில் அதிக அன்பும் உண்டு. தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, திருக்குறள், திருமந்திரம், முதலிய நூல்களை நன்றாய்க் கற்றுணர்ந்து அநுபவத்திற்குக் கொண்டுவந்தவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகஸபை அங்கத்தினராயிருந்தார். தமிழ் வித்வான்களிடத்தும் அபிமானிகளிடத்தும் மிக்க அன்பும் ஆதரவும் பாராட்டினாரிவர். ஆங்கிலங் கல்லாமல் தமிழ் மட்டுந் தெரிந்த பெரும்பான்மையான ஜநங்களும் கற்றுக் களிக்கும்படியாய் ஆங்கிலத்திலுள்ள அநேக நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார். ஸம்ஸ்கிருதத்தினின்றும் பதஞ்சலி யோக ஸூத்திரம் என்ற கிரந்தத்தைத் தமிழில் மொழி பெயர்த்துப் பிரசுரித்திருக்கிறார். அடியில் வரும் கிரந்தங்களை ஆங்கிலத்தினின்று மொழி பெயர்த்திருக்கிறார்:—

1. ஸநாதன தர்மம் (உயர்ந்த பாடம்)
2. பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும்,
3. ஹிந்துமத தூஷணையின் பரிகாரம்.
4. மனிதனின் வமிசாவளியின் உண்மை.
5. மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாரின் யோக உபந்யாஸங்கள்.
6. ஸர். தாமஸ். ஏ. கெம்பிஸ் என்பார் செய்த, "இயேசு கிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறை நூல்."
7. ஸர்வ ஸமய ஐகமத்ய ஸாரஸங்கிரஹம் (முதற் பாகம்)
8. மௌந வாக்கு.
9. ஸந்மார்க்க தீபம்.
10. ஸந்மார்க்க முறையில் ஹிதோபதேசம்.
11. ஔவை குறள் (தமிழினின்று ஆங்கில மொழிபெயர்ப்பு)

இவைகளைத் தவிர சிறு துண்டுப் பத்திரிகைகள் அநேகம் பிரசுரித்திருக்கிறார். தவிரவும் பூர்ணசந்திரோதயம் என்னும் பிரஹ்மஞான ஸபை ஸம்பந்தமான ஓர் பத்திரிகையை ஸ்தாபித்து, அதற்குப் பத்திராதிபராயிருந்து சென்ற $3\frac{1}{2}$ வருஷங்களாக மிக நேர்த்தியானவும் பயன்படத் தக்கவுமான வியாஸங்கள் எழுதியும், ஆங்கில வியாசங்கள் அநேகங்களைத் தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரித்தும் பத்திரிகையை மேன்மைபெற நடத்தியிருக்கிறார்.

ஐயரவர்களுடைய பொது ஜந க்ஷேமாபிமாநத்தையும் அவரது பரோபகாரச் செய்கைகளையும் மெச்சி மாட்சிமை தங்கிய இந்தியச் சக்ரவர்த்தியவர்கள் நாராயண ஐயரவர்களுக்கு முதலில் கண்ய அத்தாட்சிப்பத்திரிகையும் (Certificate of Honor) பிறகுகேசரி ஹிந்துபதக்கம் (Kaisari Hind Medal) பரிசும் அளித்திருக்கிறார்கள். இவரது மநத்தூய்மையையும் குணநிசயங்களையும் சிலாகிக்காதவர்களில்லை யார். ஸாமான்ய ஜநங்கள் மாத்திரமல்ல, சென்னை ஹைக்கோர்ட்டு சிப் ஜஸ்டிஸாயிருந்து இப்போது பொதுநலத்துக்காக உழைத்து வரும் ஸர்.எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள், கே.ஸி.எஸ். ஐ., என்ன, மதராஸ் கவர்ண்மெண்டில் மந்திராலோசனை ஸபையில் இந்தியன்

மேற்பராகப் புகழுடனிருக்கின்ற ஆனரபில் பி. எஸ். சிவஸ்வாமி ஐயரவர்கள், ஸி. ஐ. இ., ஸி. எஸ். ஐ. என்ன, மேற்படி ஸ்தானத்தை இவர்களுக்குமுன் வகித்திருந்த லேட் ஆனரபில் வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் ஸி.எஸ்.ஐ. என்ன, அவர்கள் தமையனார் லேட் ஸ்மால்காஸ் ஜட்ஜ் வி. ஸ்வாமிநாதையரவர்களென்ன, ஆனரபில் ஜஸ்டிஸ் டி. சதாசிவ ஐயரவர்களென்ன, மைசூர் ஜஸ்டிஸ் சந்திரசேகர ஐயரவர்களென்ன, ப்ரொபசர் (Professor) சுந்தரராம ஐயரவர்களென்ன. மற்றும் அநேக புருஷசிரேஷ்டர்களென்ன, இவர்கள் ஐயரவர்களை ஆப்தஸ்நேஹிதராய்க் கொண்டும் ஐயரவர்களிடத்தில் வழுவாத அன்பும் ஆதரவும் பாராட்டி வந்திருக்கிறார்கள்.

ஐயரவர்கள் சுமார் 5 மாஸம் அதிக அசௌக்கியமாயிருந்து பலவிதமான ஔஷதங்கள் கொடுத்தும் சௌக்கியத்திற்கு வாராமல் இருந்தது. இறப்பதற்கு சுமார் 2 மாத காலமுதல் ஐயரவர்களுடைய மரணம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. புராணப் புகழுடைய பீஷ்மரைப்போல இவர் உத்தராயண புண்யகாலத்தில் இச்சரீரத்தைக்கழித்துவிட எதிர்பார்த்திருந்தார் போலும். இவர் மரணப்படுக்கையிலிருக்கும்கால் மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாரவர்கள் இவர் கிருஹத்திற்குச் சென்று இவரைக் கண்டுபேசி ஆசீர்வதித்தனர். இவர் மரணத்திற்கு 2 நாளைக்குமுன், நந்நாட்டிலும் மேல் நாட்டிலும் பிரஸித்திபெற்ற ஸ்ரீமான் ஜீனராஜதாஸர் அவர்கள் இவரைக் கண்டு ஸம்பாஷித்ததுமன்றி லோககுருவின் அவதாரத்தைப்பற்றி பிரஸங்கம் செய்து முடித்தபின்னரும் இவருடைய மிருத சரீரத்தைத் தரிசித்து இவரது நன்மைக்காக குருத்தியாகம் செய்து மெல்ல நடந்தே வெளியேறினர். அப்போது ஸ்ரீமான் கூன்ஸ் என்னும் ஒரு அமெரிக்கன் தியாஸபிஸ்டு தரிசிக்கவந்தனர். இவர் மரணதினத்தில் தற்செயலாய் மாயூரம், தஞ்சை, நெல்லூர் முதலிய இடங்களினின்றும் இவருக்கு ஆப்தர்களான சிநேகிதர்கள் வந்திருந்தார்கள். இவருடைய மிருத சரீரத்தை தஹனகட்டத்திற்குக் கொண்டுபோவதற்கு இவருடைய சுற்றத்தாரும், பிரஹ்மஞான சபை ஸ்நேகிதர்களும் போட்டிபோட்டுக் கொண்டு, கொண்டுபோய்ச் சேர்ந்தனர். ஹிந்து சாஸ்திர முறைப்படி நடக்கவேண்டிய கிரி

THE LATE MR. P. NARAYANA IYER.

கியைகளெல்லாம் இவரது சத்புத்திரரால் ஒழுங்காய் நிறைவேறின. இவர் தேஹ வியோகமான தினத்திற்கு 12 வது நாளில் ஸபிண்டீக ரணம் என்ற சடங்கு நடந்து தானங்கள் செய்யும் சமயத்தில் ஸ்ரீ மீநாக்ஷி ஸுந்தரேசுவரர்கள் இவரால் வழக்கமாய்த் தம் கிருஹத் திற்குமுன் நடத்தப்பட்டு வந்த மண்டபப் படியில் எழுந்தருளி யது இவ்வன்பரது ஆன்மாவைக் கைலாசத்திற்குக் கொண்டு போய் முத்தியளிப்பதற்கு எழுந்தருளியது போல் தோன்றியது.

உலக வாழ்க்கையில் ஐயரவர்களுக்கு துக்கமும் சுகமும் கலந் தே நடந்து வந்திருக்கின்றன. மிகவும் அன்புள்ள இரண்டு மனை விகளை ஒருவர் பின் ஒருவராய் இழக்கும் துர்பாக்கியம் இவருக்கு ஸம்பவித்தது. அவ்விருவர்களின் ஞாபகச் சின்னமாக ஆடு, மாடு, குதிரை முதலிய பிராணிகளுக் குதவும்படி தண்ணீர்க் குழாயும் தொட்டியும் தம் கிருஹத்திற்கருகில் ஏற்படுத்தியிருக்கிறார். இவ் விருவர்களின் பெயரைக்குறிக்கும் பொருட்டு "ருக்மிணீ இலக்ஷ்மீ தர்மம்" என்று அக்குழாய் கட்டிடத்தில் ஒரு கருங்கல்லில் வரை யப்பட்டிருக்கிறது. இலக்ஷ்மி அம்மாளிடத்தில் ஒரு ஆண்குழந்தை பிறந்து அவர் இப்போது 24 வயதுள்ளவராய்ப் பி. யன் நாகேசுவர ஐயர் என்ற பெயரை யுடையவராய் பி. ஏ., பி. எல். பரீக்ஷை தேர்ந்து வக்கீல் உத்தியோகத்தை வகிக்கப் பழகிக்கொண்டிருக்கி றார். அவர் "மகனுரைக்கும் தந்தை நலத்தை" என்றபடி பிதா அவர்களின் பெருமை அவர் மூலமாய் விளங்கும்படி நடந்துகொண்டு சிரஞ்சீவியாயிருந்து கீர்த்தியைப் பெறும்படியாக, ஈசுவரனை யெப் போதும் தியானிப்போமாக. நமது ஐயரவர்களுடைய மூன்றாவது பார்யையாகிய மாதுஸ்ரீ மீனம்பாளம்மாளவர்களுக்கு ஆறு பெண் மக்களும் நாலு வயதுள்ள ஒரு ஆண்குழந்தையு மிருக்கிறார்கள் இவர்களெல்லோரும் நீடூழிகாலம் வாழ்ந்து க்ஷேமமாயிருக்க ஈசன் அருள் புரிவாராக.

P. N. நாகநாத ஐயர்

390. ———

உலகத்தில் வெளிப்படையாய் நடைபெறுகின்ற ஒவ்வொரு மதமும் அவதாரம் என்ற விஷயத்தைப் பற்றி சிலசில அபிப்ராயங்களை வைத்துக் கொண்டிருக்கிறது. ஹிந்து மதத்தில் அதைப்பற்றிய விஷயங்கள் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. எல்லா மதங்களையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கும் பக்ஷத்தில், சில்லறை விஷயங்களில் அநேக பேதங்கள் இருந்தபோதிலும், அவதாரத்தைப் பற்றின நம்பிக்கை மாத்திரம் எல்லாவற்றிற்கும் பொதுவாகவேயிருக்கின்றது. ஆகையினால் எந்த விஷயமானது ஸகல ஜனங்களுக்கும் ஸகல மதஸ்தர்களுக்கும் ஸம்மதமாயிருக்கின்றதோ, அந்த விஷயத்தில் சில உண்மைகள் அமைந்திருக்க வேண்டும் என்பதை விவேகமுள்ள மனிதர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் அவதார விஷயங்களை நாம் சரியாய் கிரஹித்தாலொழிய அவதாரத்தைப் பற்றி தற்காலத்தில் வழங்கிவருகின்ற அபிப்பிராயங்களை ஒப்புக்கொள்வதினால் அநேக தவறான கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதில் ஸந்தேஹமில்லை. ஒவ்வொரு மதத்திலுமுள்ள உண்மைகள் தற்காலத்தில் சிதைந்து போயிருக்கின்றன. மதங்களையங்களை உள்ளபடி அறியும்படியான சக்தியும் மனிதர்களுக்குள் இல்லாமற் போய்விட்டது. ஆகையினால் மதங்களின் உண்மையையும் வாஸ்தவ கருத்தையும் அறிந்த மனிதனைக் காண்பது அரிது. ஒவ்வொரு மதத்திலுமுள்ள உண்மைகளை உட்கொள்ள வகையறியாது வெறும் உமிபோன்ற வெளிக்கொள்கைகளை மேற்கொண்டிருக்கின்ற மனிதர்கள் அநேகர் இருக்கின்றார்கள். புராதன ஆசாரங்களையும் வழக்கங்களையும் ஸம்ஸ்காரங்களையும் வழக்கத்தில் வந்திருக்கும் மற்றக் கொள்கைகளையும், அவைகளின் வாஸ்தவ கருத்து ஆதியில் என்னவாயிருந்தது என்பதைப்பற்றியே கொஞ்சங் கூட யோசனையில்லாமல், குருட்டுப்பிடியாகவே, மூட பக்தியுடனும் நம்பிக்கையுடனும் விவேகம் குன்றிய பற்றுதலுடனும் கைக்கொண்டு வருகின்றார்கள். மதாசாரியர்கள் விவரணம் செய்யும் விஷயங்களை ஆழ்ந்து பார்க்காமல், புராதன ஆசாரங்களையும் வழக்கங்களையும் சில ஸம்ப்ரதாயங்களை அனுஸரித்த அர்த்தங்களையும் வெளிப்படை

யர்கக் கைக்கொண்டு வருகின்றார்கள். அவைகளின் தத்துவார்த்தங்களை இழந்துவிட்டார்கள். அப்போதைக்கப்போது அவதரிக்கின்ற அவதார புருஷர்கள் ஸநாதன உண்மையை வெளியிட்டு, புராதன ஆசாரங்கள், வழக்கங்கள், ஸம்ஸ்காரங்கள், ஸம்பிரதாயங்கள், கொள்கைகள் முதலியவைகளின் உண்மையான கருத்தை ஜனங்களுக்குப் போதிப்பதுண்டு. ஆனால் கருத்தை யிழந்த கொள்கைகளையும் ஆசாரங்களையும் ஸம்பிரதாய பரமான அர்த்தங்களையும் குரங்குப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கிற ஸாதாரண ஜனங்கள், புதிதாய்க்காட்டப்படும் ஞான ஜோதியைப் பார்ப்பதற்கு சக்தியற்றவர்களாயிருப்பதால், சிதைந்துபோன உண்மையைத் திரும்ப லோகத்துக்குக் கொண்டுவந்து அக்ஞானிகளை உத்தாரணம் பண்ணுகின்ற மஹாத்மாக்களை பலவிதங்களில் அவமதிக்கின்றார்கள். ஆகையினாலே, எந்தக் காலத்திலும், எந்த மதத்திலும், ஏதாவது ஓர் அவதார புருஷன் அவதரித்து சிதைந்துபோன உண்மையை வெளியிடுங்காலங்களில், சண்டை சச்சரவுகளும், கலகங்களும் உண்டாகிக்கொண்டே வருகின்றன. ஏனென்றால், அந்த மஹான்கள் வெளியிடுகின்ற உண்மையானது, ஸாதாரண மனிதர்களுடைய காமக்குரோதங்களுக்கும், மதவிஷயமான சண்டை சச்சரவுகளுக்கும், மதவைஷம்யத்தைக் காரணமாகக்கொண்ட அநேக மதப்பிரிவுகளுக்கும், உட்பிரிவுகளுக்கும் ஒத்திருப்பதில்லை. அவர்களுடைய அல்ப பிரக்ஞையால் எட்டக்கூடாத உயர்வை அடைந்ததாயிருக்கின்றது. நாம் இங்கு ஆராயப்புகும் அவதாரம் என்ற விஷயத்திலும் மேலே சொன்ன மாதிரிதான் நடைபெறுகின்றது. ஒவ்வொரு மதத்திலும் அவதாரத்தைப்பற்றி ஸம்பிரதாயமாய் சில சில அபிப்ராயங்களும் கொள்கைகளும் பரம்பரையாய் வந்துகொண்டிருக்கின்றன. அவைகளை மாற்றுவதென்றால் மிகக் கடினமாகும். குப்த வித்தையின் இரகஸ்யங்களை ஆராய்ச்சி பண்ணுகின்ற சிலசில மஹான்கள் அப்போதைக் கப்போது, அவதாரத்தைப் பற்றிய ஸம்பிரதாயமான அபிப்ராயங்களை நீக்கி, யுக்திக்கும் புத்திக்கும் நியாயத்துக்கும் அநுபவத்திற்கும் ஒத்துவரும்படியாய் சிலசில அபிப்ராயங்களைவெளியிட்டிருக்கிறார்கள். நாம் இப்பொழுது அடைந்திருக்கிற பரிபக்குவதசையில், அவர்கள் வெளியிட்டிருக்கிற அபிப்ராயங்கள் உண்மையா,

உண்மையில்லையா வென்று பார்த்து அறிவதற்கு நமக்கு இன்னும் சக்தி ஏற்படவில்லை. 'எவன் என்னுடைய அவதார ரகஸ்யத்தை உள்ளபடி உண்மையாய் அறிகின்றானோ, அவன் இந்த தேகத்தை விட்டவுடன் என்னையே வந்தடைகின்றான். அவனுக்கு வேறு ஜன்மம் கிடையாது' என்று கிருஷ்ணபகவான் பகவத் கீதையில் நான்காவது அத்தியாயத்தில் 9-வது சுலோகத்தில் சொல்லுகிறபடி, உண்மையைக்கண்டுணர்ந்து, பகவானுடைய பூர்ணமான ஸ்திதியை (Divine Perfection) யடைகிறவர்கள்தான் பகவானுடைய அவதார ரகஸ்யத்தை உள்ளபடி நேருக்கு நேராய் அறியக்கூடும் என்று தோன்றுகின்றது. அந்த வார்த்தைகள் பகவானுடைய வாக்கிலிருந்தே வந்திருக்கின்றன. அப்படிப்பட்ட பூர்ணமான ஸ்திதியை யடைந்து நாம் நேருக்கு நேராய்ப் பார்த்துக்கொள்ளுகிற வரையில், நம்மைவிட புத்தியிலும் ஞானத்திலும் அநுபவத்திலும் பெரியவர்களாயிருக்கிறவர்கள், அவதாரத்தைப்பற்றி அவர்கள் தெரிந்துகொண்ட வரையில், வெளியிட்டிருக்கிற அபிப்ராயங்களையும், கொள்கைகளையும், நமது புத்திக்கும் யுக்திக்கும் நியாயத்திற்கும் ஒத்தவைகளாயிருந்தால், அவைகள் உண்மையாயிருக்கலாம் என்று ஒருவாறு நாம் ஊகிக்கலாம். அநேக விஷயங்களிலிருப்பதுமாதிரி, இந்த விஷயத்திலும் நமது புத்தியும் யுக்தியும் நியாயமுந்தான் நமக்கு ப்ரமாணம். ஸம்ப்ரதாய ரீதியாய் தொன்றுதொட்டு வழங்கி வருகின்ற அவதாரத்தைப் பற்றிய கொள்கைகள் நம்முடைய புத்திக்கும் யுக்திக்கும் நியாயத்திற்கும் ஒத்துவரவில்லை யென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. ஸம்ப்ரதாயமான அபிப்ராயங்களையும் கொள்கைகளையும் விலக்கி, புத்திக்கும் யுக்திக்கும் நியாயத்திற்கும் ஒத்துவரும்படி ஞானத்தைப்புகட்டுகின்ற தத்துவ விசாரணையில் நிபுணர்களான சில மனிதர்களுடைய அபிப்ராயங்களை இப்பொழுது ஒவ்வொன்றாய்க் கவனிப்போம்.

முதலில் ஸகல மதங்களும் ஒப்புக்கொள்ளுகின்ற விஷயத்தை எடுத்துக்கொள்வோம். பகவானுடைய உதவி உலகத்தில் வேண்டியிருக்கின்ற காலங்களிலெல்லாம், பகவானுடைய அவதாரங்கள் உலகத்தில் நிகழ்கின்றன. பகவானுடைய அவதாரங்களில், பகவானுடைய முதல் ஆவிர்ப்பாவமாகிய (Manifestation) விராட் ஸ்வரூபம்

முதல் அவதாரமாக பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த விராட்ஸ்வரூபமாகிய முதல் ஆவிர்ப்பாவத்திற்கும் இதர அவதாரங்களுக்கும் வித்தியாஸம் உண்டு ஸகல விதமான அவதாரங்களும் விராட் ஸ்வரூபத்திலிருந்து வெளிப்பட்டு, காரியம் முடிந்ததும், அந்த விராட் ஸ்வரூபத்திலேயே லயத்தை அடைகின்றன வென்றும் பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையினால் உலகத்தில் நடக்கின்ற அவதாரங்களெல்லாம் அம்சாவதாரங்களே யென்றும் பகவானுடைய பூர்ணமான அவதாரங்கள் இதுவரையில் நேரவில்லை யென்றும் ஒரு சாரார் சொல்லலாம். அச்சார்பை எடுத்துக் கொண்டால், எந்த விதத்திலும் அஸம்பாவிதமாயிருப்பதாகத் தோன்றவில்லை. பிரபஞ்சத்தில் ஏதாவது மாறுதல்கள் ஏற்படவேண்டி யிருந்தாலும் ஸரி, அல்லது, ஏதாவது சீர் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியதா யிருந்தாலும் ஸரி, அம்சாவதாரங்களும் லீலாவதாரங்களும் நடந்து வருவதாகத் தெரிகிறது. அவதாரங்களுக்குள் ராமகிருஷ்ணாதி அவதாரங்களை பூர்ணவதாரமாகச் சொல்வதுண்டு. ஆனால் நன்றாய் ஆழ்ந்து பார்க்கும் பக்ஷத்தில், அவைகளும் பூர்ணவதாரங்கள் இல்லையென்றே தெரிகிறது. ஏனென்றால் வால்மீகி மஹரிஷியே, ராமசந்திர மூர்த்தியைப்பற்றி பேசுங்காலையில், விஷ்ணுவில் பாதி அம்சமுடையவர் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார். பாதி அம்சம் என்று சொல்லிவிடும் பக்ஷத்தில், பூர்ணவதாரம் என்று எப்படிச்சொல்வது? கிருஷ்ண பகவானும் விஷ்ணுவின் ஓர் அம்சம் என்றே பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த அவதாரங்களை ஜனங்கள் பூர்ணவதாரங்கள் என்று மதிக்கிறார்களோ, அவைகள் அம்சாவதாரங்களென்று ஏற்படும் பக்ஷத்தில், மற்ற அவதாரங்களை பூர்ணவதாரங்கள் என்று சொல்வதற்கும் அம்சாவதாரங்க ளல்லவென்று சொல்வதற்கும் இடமில்லை. அவைகளைப் பற்றிக் கவலையேயில்லை. பின்னும் பார்த்தால், ராமகிருஷ்ணாதி அவதாரங்களுக்குத் தாழ்ந்தவைகளேயென்று மதித்தல் வேண்டும். ஆகையினால் ஸகல அவதாரங்களும் அம்சாவதாரங்க ளென்றே சொல்லலாம். ராமகிருஷ்ணாதி அவதாரங்கள் மற்ற அவதாரங்களைக் காட்டிலும் பூர்ணமாக விருக்கலாம். மற்ற அவதாரங்களைக் காட்டிலும் ராம கிருஷ்

ஞுதி அவதாரங்கள் பூர்ணம் என்று சொல்வதற்கு சிலசில நியாயங்கள் உண்டு. மற்ற அவதாரங்கள் போலில்லாமல், புருஷாயுஸின் ஆரம்பம் முதல் கொண்டு கடைசி வரைக்கும் பகவான் இப்புவியின்கண் தோன்றினபடியால், இந்த அவதாரங்களுக்குப் பூர்ணவதாரங்கள் என்று பெயர் வந்திருக்கலாம். மேலும், இந்த இரண்டு அவதாரங்களில் மாத்திரம் துஷ்ட நிக்ரஹம், சிஷ்ட பரிபால்னம், தர்மஸ்தாபனம், தத்துவோபதேசம் இவைகளெல்லாம் ஒன்று சேர்ந்திருக்கின்றன. ராமாவதாரத்தில் தத்துவ உபதேசம் நடக்கவில்லையென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். தர்மத்தை உபதேசிக்காமல், நடத்திக்காட்டினதே போதுமான ஸாக்ஷியாகையினால் இரண்டு அவதாரங்களிலும் துஷ்ட நிக்ரஹம், சிஷ்ட பரிபாலனம், தர்ம ஸ்தாபனம், தத்வோபதேசம் இவைகளெல்லாம் நிறைவேறியிருக்கின்றன. ராமாவதாரத்தில் துஷ்ட நிக்ரஹம், சிஷ்டபரிபாலனம் மேல் நாடியிருக்கின்றன. கிருஷ்ணவதாரத்தில், தத்துவ உபதேசம் மேல் நாடியிருக்கிறது. மேலும், கிருஷ்ணவதாரத்தை பூர்ணவதாரமாகச்சொல்வதற்கு மற்றொரு நியாயமுண்டு. அதாவது, 2, 3, தடவைகளில் தன்னுடைய மஹிமையாலும் யோகபலத்தாலும் பகவான் விசுவரூபத்தைக் காட்டியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால் கிருஷ்ணவதாரத்தைப் பூர்ணவதாரமென்று சொல்வதற்கு, இதுவும் ஓர் காரணமாகவிருந்தாலும் இருக்கலாம். விராட் ஸ்வரூபமாகிய பகவானுடைய முதல் ஆவிர்ப்பாவத்திற்கும் அவதாரம் என்று கூறப்பட்டு வருகின்ற மற்றவைகளுக்கும் மற்றொரு வித்யாஸமுண்டு. பிரபஞ்ச கதியில் அப்போதைக் கப்போது சிலசில மாறுதல்கள் ஏற்படவேண்டிய காலங்களிலும் சிலசில சீர்திருத்தங்கள் ஏற்படவேண்டிய காலங்களிலும் அம்சாவதாரங்களும் லீலாவதாரங்களும் வருவதாகச் சொல்லப்பட்டிருக்கிறதே யொழிய, பகவானுடைய முதல் ஆவிர்ப்பாவமாகிய விராட் ஸ்வரூபம் வருவதாகச் சொல்லப்படவில்லை. மற்ற அவதாரங்கள் விராட் ஸ்வரூபத்தினுடைய அம்சங்கள் என்றும் அதிலிருந்து அவைகள் வெளிப்பட்டு, அதிலேயே லயத்தை யடைகின்றனவென்றே சொல்லப்பட்டிருக்கின்றது.

பகவானுடைய அவதார விஷயமாய் ஹிந்துக்கள் இரண்டு வார்த்தைகளை உபயோகிப்பது வழக்கம். ஒன்று, 'அவதாரம்' என்ற

வார்த்தை. மற்றொன்று 'ஆவேசம்' என்ற வார்த்தை. அவைகளுடைய அர்த்தத்தைக் கவனித்துப் பார்த்தால், அவைகளுக்குள்ள வித்யாஸம் தோன்றும். அவதாரம் என்பதற்கு கீழே இறங்குவது என்று அர்த்தம். ஆவேசம் என்பதற்கு ஊடுருவுதல் என்று அர்த்தம். முதல் வார்த்தையில் மேலேயிருந்து கீழேயிறங்குவது என்ற அர்த்தம் விசேஷமாய் த்வனிக்கின்றது. அதாவது, ஈச்வர ஸ்தானத்திலிருந்து, மனித ஸ்தானத்திற்காவது, அல்லது மிருக ஸ்தானத்துக்காவது இறங்குவது என்பது கருத்து. இரண்டாவது வார்த்தையில், மனிதனிடத்தில் பகவத் சக்தியானது பிரவேசித்திருக்கின்றது என்ற அர்த்தம் த்வனிக்கின்றது. அதாவது ஓர் குறிப்பிட்ட காலத்தில் ஓர் மனிதனிடத்தில் பகவத் சக்தியானது சிலசில காரியங்களை முடிப்பதற்கு விசேஷமாய் பிரவேசித்திருக்கிறது என்பது கருத்து.

பகவானுடைய அவதாரங்கள் வருவதற்கு ஸந்தர்ப்பங்கள் எவை? இதற்கு உத்தரம் கிருஷ்ணபகவானே பகவத் கீதையில் நான்காவது அத்யாயத்தில் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார் :— "தர்மத்திற்குக் குறைவு நேரும் பொழுதும், அதர்மத்திற்கு உயர்வு ஏற்படும் பொழுதும், நானே வருகின்றேன். ஸாதுக்களை ரக்ஷிப்பதற்கும், தர்மத்தை நிலைநிறுத்துவதற்கும், துஷ்டர்களை சிக்ஷிப்பதற்கும், நான் யுகத்துக்கு யுகம் அவதரிக்கின்றேன்." பகவானுடைய அவதாரம் நடக்கின்ற காலத்தை அவரே நமக்குத் தெளிவாய் தெரிவித்து விட்டார். மேலும், ஜனங்கள் விஷயமாய் சிலசில சீர்திருத்தங்கள் செய்வதற்கு வருவதோடுகூட, பிரபஞ்ச கதியில் சிலசில காலங்களில் முக்கியமாய் சிலசில மாறுதல்கள் ஏற்படவேண்டியிருக்கின்றன. அவைகள் முக்கியமாய் பிரபஞ்ச கதியின் ஆரம்ப தசைகளில்தான் விசேஷமாய் ஏற்படவேண்டியிருக்கும். அப்படிப்பட்ட மாறுதல்களைச்செய்துமுடித்து, பிரபஞ்சகதி சரியாய் நிகழும் வண்ணம், பகவான் அடிக்கடி அவதரிக்கின்றார். அவர் வருவதற்கு அதுதான் காரணம். (இன்னும் வரும்)

கே. கோடீசுவர ஐயர்.

பத்ரம் - 409

396

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்.*

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேச மொழிகள் மிகுந்த அர்த்த புஷ்டியுள்ளவைகள். அவ்வுபதேச மொழிகளில், ஞான மார்க்கமாகிய விகாச முறையென்னும் ஏணியின் முதற்படியில் நிற்பவர், கடைசி அதாவது முடிவான படியை அடைந்தவர், மத்தியில் நிற்பவர் ஆகிய இவர்கள் ஒவ்வொருவருக்கும் பொருந்தினதாயுள்ள விஷயங்கள், அடங்கியிருக்கின்றன. அவைகளிலிருந்து பொதுவாக நான் தெரிந்து கொண்ட சில விஷயங்களை மட்டும் இங்கு கூறுவதைத்தவிர அவைகளைப்பற்றி விரிவாக எடுத்துரைப்பது எனக்குச் சாத்தியமானதன்று. அவர் கூறியிருக்கும் உபதேச மொழிகளின் உண்மைகளை நான் விரித்துரைக்கப்புகின் அது சமீபத்தில் "காமன் வில்" என்னும் பத்திரிகையில் கூறியிருக்கிறபடி ஒரு கோபுரத்தின் (Pyramid' உச்சியில் நின்றுகொண்டு ஒரு அங்குல நீளமுள்ள நாடாவால் அளந்து அதன் ஆழத்தைக் கணக்கிட முயல்வதையும், ஒரு பெரிய மலையின் உயரத்தை ஒரு அடிக்கோலால் அளந்து கணக்கிட முயல்வதையும் ஒக்கும். அப்படியிருந்த போதிலும் அவ்வளவு பெரிய மலையினுடைய தோற்றங்களிற் சிலதை ஒரு சித்திரக்குள்ளாகும் அறிந்து கொள்ளக்கூடியதுபோல நான் அறிந்தவைகளைக் கூறுகிறேன்.

ஸ்ரீ இராமகிருஷ்ண ஸ்வாமிகளை ஞானியென்று சொல்வதைக் காட்டிலும் மஹா பக்தர் என்று சொல்வது பொருந்தும். ஞானமார்க்கத்தில் செல்லுகிறவர்கள் முக்தியை யடைவதற்குமுன் பராபக்தியை யடையவேண்டும். அதே மாதிரி பக்தி மார்க்கத்தில் செல்லுகிறவர்கள் ஞானத்தை யடையவேண்டும். இவ்விரண்டு மார்க்கங்களும் முடிவில் ஒரே நிலையிற் சேர்ப்பிக்கின்றன. ஸ்ரீ இராமகிருஷ்ணர் முதலிற் பக்தராயிருந்து அம்மார்க்கத்தின் வழியாக ஞான

---

* சென்ற பிப்ரவரி௴ 20௳ யன்று மதராஸில் நடந்த ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸஸ்வாமி அவர்களின் பிறந்தநாட் கொண்டாட்டத்தில், ஆனரபில், திவான்பஹதூர் T. சதாசிவ ஐயர் அவர்களால் ஆங்கிலத்தில் உபந்யசிக்கப்பட்ட விஷயங்கள்.

த்தை யடைந்தார். நரேந்திரரென்று முதலிற் பெயர் பூண்டிருந்த சுவாமி விவேகாநந்தர் கடவுளை அடையும் மார்க்கத்தைப் பற்றிக் கேட்டபோது குருநாதன் ஸ்ரீ இராமகிருஷ்ணர், முக்கியமாக வேண்டிய ஒரு விஷயம் கடவுளிடத்து அன்பு அல்லது பக்தி, ஒருவன் கடவுளிடத்து அன்பைச் செலுத்தினால் விவேகம், வைராக்கியம், முதலிய குணங்கள் தாமாகவே அவனுக்குண்டாகி விடும், "என்று பதிலளித்தார். மேலும் கடவுளை " நிர்க்குணமாகத் தியானிப்பது மிகவு முயர்ந்தது; ஆனால் அதுதான் உண்மையான நெறி யென்றும், மற்றதெல்லாம் தவறான வழியென்றும் நினைத்து விடாதே அவரை சகுணமாகத்தியானிப்பதும் அதைப்போலவே அவ்வளவு சரியான மார்க்கந்தான்," என்று கூறியிருக்கிறார். ஸ்ரீசைதன்ய சுவாமிகள் செய்ததுபோல இப்பக்தரும் கடவுளிடத்துள்ள அன்பின் மிகுதியால் ஆடுவதும் பாடுவதும் வழக்கம். அவரடைந்திருந்த பேரன்பால் சில சமயங்களில் கிருஷ்ண என்னும் சப்தத்தை பூர்த்தியாக உச்சரிக்க முடியாமல், கிஷ்ண, கிஷ்ண என்று பச்சைக் குழந்தைகளைப்போல் கொன்னிப் பேசுவார். அது உலகப்பற்றற்றதும் கபடமற்றதுமான பேரன்பு.

ஸ்ரீ இராமகிருஷ்ண ஸ்வாமிகள், கடவுள், கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சர்வ பிராணிகள் ஆகிய இவ்விரண்டிடத்திலும் சர்வ வியாபகமான அன்பைப் பாராட்டினார். உலகத்திலுள்ள பிராணிகள் தன்னிடம் நேசமுள்ளவைகளானாலும், விரோதமுள்ளவைகளானாலும், நேசம் விரோதம் இரண்டு மில்லாதவைகளானாலும், அவைகளெல்லாவற்றினிடமும் பக்ஷத்தையே காண்பித்தார். கடவுளே ஜகன்மாதா, பிதாவென்பதும், கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சகல பிராணிகளும் சகோதரர்கள் என்பதும் அம்மகானுடைய முதன்மையாயுள்ள உபதேச மொழிகள்.

சர்வமதங்களுக்குள்ளும் சகோதர பாவம் நிகழ்ந்தாலொழிய மனிதருக்குள் சகோதர பாவத்தை நிலைப்படுத்துவது சாத்தியமாகாதென்று, பராக்கிரமசாலியாகிய ஸ்வாமிவிவேகாநந்தரின் குருநாதன், அறிந்திருந்தார். ஆகையால் அவர் ஒரு மகமதிய பக்தரிடம் சென்று அவருடன் வசித்து, அவரால் சொல்லப்பட்ட ஒழுங்கில் கட

ந்து, இந்துமத சாஸ்திர ஒழுங்குகளை அனுசரித்து நடக்கும் பக்தர்களை அவ்வொழுங்குகள் எந்நிலைமையிற் கொண்டுபோய்ச் சேர்க்கின்றனவோ, அதே நிலைமையைத்தான் மகமதியமார்க்கத்தை அனுசரித்தவர்களும் அடைகின்றனரென்று தெரிந்துகொண்டார். அதே மாதிரி கிருஸ்து மதசாஸ்திர ஒழுங்குகளை அனுசரித்து அதிலும் அவ்வொற்றுமையை அறிந்தார். அன்றியும் தமக்கெதிர்ப்பட்டவரை எல்லா மத ஒழுங்குகளையும் தம் மனப்பூர்வமாக அப்பியசித்துப் பார்த்திருக்கிறார். அம்மஹானிடம் மதவித்யாச மென்பதே கிடையாது. கிருஸ்தவர்களுக்காவது மகமதியர்களுக்காவது முக்தியில்லை யென்றும், மேல் நாடுகளிற் பிறந்தவர்கள் பெரிய பக்தர்களாகவாவது, ஞானிகளாகவாவது ஆகமுடியாதென்றும் சொன்னதே இல்லை. ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்சர் கேசப்சந்தர்சன் என்பவருக்கு எல்லாமதங்களின் முடிவும் ஒன்றேதான் என்று உபதேசித்திருக்கிறார். இவ்விதம் எல்லாமத சாஸ்திரங்களையும் பக்தியுடன் படிக்க வேண்டு மென்பது அவருடைய இரண்டாவதான உபதேசம்.

கடைசியாக அம்மஹான், கடவுளை ஸ்வாநுபூதியாக அறிய வேண்டு மென்பதே எல்லா மதங்களின் சாரம் என்பதையும்; மேலான பக்தனும் உயர்ந்த ஞானியும் எல்லா மதத்துக்கும் பொதுவாயுள்ள ஒரே நிலையை அடைகிறார்களென்பதையும், அதன் சாயைகளே வேறுபடுத்துவதாக அமைந்துள்ள பல மதங்களின் கோட்பாடுகளென்பதையும், அவைகளெல்லாம் ஒவ்வொரு மனிதனிடமும் குப்தமாயிருக்கும் ஆத்ம சக்திகளை விகசிக்கச் செய்கின்றனவென்பதையும் தாமே உலகத்தாருக்கு நடந்து காட்டியிருக்கிறார். ஸ்ரீஇராமகிருஷ்ணர் தம் முந்தின ஜன்மத்தையும், தாமிப்போது உலகத்தில் அவதரித்திருப்பதின் காரணத்தையும் அறிந்தவ ரென்பதற்கு சுவாமி விவேகாநந்தரே சாக்ஷி. இம்மகான் சமாதி நிலையில் மிகவும் மேலான பதவியை அடைந்தவர். மஹா சித்திகளில் இது ஒன்று. அவர் யோகாப்பியாசம் செய்து வந்தாரென்பதிற் சந்தேகமே இல்லை. அவர் யோகாப்பியாசம் செய்து கொண்டிருக்கும்போது சூர்யன் புறப்பட்டதையாவது அஸ்தமித்ததையாவது தன்னால் சொல்ல முடியா தென்பதாக சுவாமி விவேகாநந்தரிடம் சொல்

வியிருக்கிறார். அவர் தன்னைப்பற்றிய உணர்ச்சிகளையும் ஆகாரத்தையும் முற்றிலும் மறந்தவர். யோகாப்பியாசத்தால் தன்னுடைய இந்திரியங்களை ஜயித்து ஞானமார்க்கத்துக்கு அத்யாவசியமாயுள்ள வைராக்கியத்தை (விராகம்) அடைந்திருந்தார். பொன்னாசை, முதலியன சிறிதளவும் அவரிடம் கிடையாது. இம்மகானை உயர்ந்த பிரஹ்மக்ஞானி (Theosophist) என்று சொல்லவேண்டும். ஏனெனில் அவர் இவ்வுலகத்தை விட்டு நீங்குமுன் அவருக்கேற்பட்டிருந்ததும் மிகவும் துன்பத்தைக் கொடுப்பதுமான நோயையும் தான் அடைந்திருந்த சித்திகளால் நீக்கிக்கொள்ள மறுத்து விட்டார்.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸ ஸ்வாமிகள் உலகத்தாருக்கு அதிகமாக உழைத்திருக்கிறார். ஸர்வத்ர சகோதர பாவம், ஐக்கியத்தைக் குறித்து சர்வமத சாஸ்திரங்களின் ஆராய்ச்சி, மனிதனிடமுள்ள ஆத்ம சக்திகளை ஞானயோக சாஸ்திர முறைப்படி விகஸிக்கச் செய்தல் ஆகிய இம்மூன்று முறைகளிலும் இந்துக்களுக்காக முக்கியமாக உழைத்திருக்கிறார். அவருடைய ஒழுக்கத்தாலும் உபதேசத்தாலும் நம்மவர்களாகிய இந்துக்களுக்கு ஏற்பட்டிருக்கும் உணர்ச்சிகள் நெடுங்காலம் நிலைபெற்றிருக்கும். இனிவருங் காலங்களில் அவருடைய சிஷ்யர்கள் அவரிடமுள்ள பக்தியால் அவர் சரித்திரத்தில் அநேகம் கதைகளைச் சம்பந்தப்படுத்தி அவரை ஒரு அவதாரமெனக் கொண்டாடுவதும், அவருடைய உபதேச மொழிகளை அவரவர்கள் கொள்கைக்குத் தக்கவாறு பொருள் படுத்திக் கூறுவதுமாகிய நிலைமைகள் ஏற்படப்போவது நிச்சயம். ஒரு ஜீவன் முத்தனானவன் வெள்ளைச் சரீரமுள்ளவனாகப் பிறப்பதும், இந்தியாவைத் தவிர மற்றெந்தவிடத்தில் ஜனிப்பதும் சாத்யமல்லவென்று, மதத் துவேஷத்தாலும், மூடபக்தியாலும், ஜாதியபிமானத்தாலும் தாம் கொண்டிருக்கும் தப்பெண்ணத்துக்குப் பொருந்த, அம்மகானுக்குப் பின்னிருந்த அவர் சிஷ்யர்களாகிய சுவாமி விவேகாநந்தர் முதலியவர்களின் உபதேச மொழிகளுக்கும் பொருள் கூறப்படப்போவதுண்மை.

வரதக்ஷிணையால் வரும் தீமைகளும் சிநேகலதையின் ஆத்மத்யாகத்தைப் பற்றிய சில குறிப்புக்களும்.

ஆங்கிலக் கல்வியும் சர்க்கார் உத்யோக ஜீவனமும் தலையெடுத்த பின்னர், பங்காளத்தில்,—ஏன் பங்காளம் மட்டும்?—இந்தியா முழுமையிலுமே, கல்யாணத்திற்குப் பெண்களை வைத்துக்கொண்டிருக்கும் பெற்றோர்கள் பலர், அப்பெண்களுக்கு ஏற்ற நாயகனைத் தேடுவதை விட்டு, இங்கிலீஷ் படித்த அல்லது படிக்கும் பிள்ளைகளையே தேடிப்பிடிக்கின்றனர். இவர்களுக்குத் தம்மால் எவ்வளவு பெருந்தொகை கொடுக்கக்கூடுமோ அவ்வளவும் கொடுக்க உடன்படுகிறார்கள். இவ்வாறு செய்வதிலும் எவ்வளவு போட்டி! ஒருவர் கொடுக்கும் தொகைக்கதிகமாக மற்றொருவர் கொடுத்து விடுவாராயின் முன் நிச்சயித்திருந்த கல்யாணம் நின்றும் போய்விடுகிறது.

அதிபணக்காரராக உள்ள பெற்றோர்களுக்குப் பணம் லக்ஷியமில்லாமல் இருக்கலாம். அவர்கள் தம் பெண்களின் நிமித்தம் எவ்வளவு வேண்டுமாயினும் செலவு செய்யட்டும்; "ஈத்துவக்கும் இன்பம் அறியா" இவ்வன்கணவர் சர்க்கார் உத்யோகம் பெறும்வரை அப்பிள்ளைகளின் படிப்பிற்கோ, அல்லது தாம் கருதி மணம் செய்வித்த அவர்கள் எருமைக்கடாக்களுக்கும் கேடாகப்போய்விட்டார்களேயானால் அவர்களது ஜீவனோபாயத்திற்கோ, அல்லது பிறவிதங்களில் அவர்கள் மனத்தைத் திருப்தி செய்வதிலோ தாம் செலவழிக்க மனமில்லாது சேர்த்த பெருந்தொகையைச் செலவழிக்கட்டுமே என்றால்இதனால் பிறர்க்கு எவ்வளவு சங்கடம் நேரிடுகிறது பாருங்கள்!

பூணக்கொழுப்புள்ளவர்களைப் பார்த்துப் பரம ஏழைகளும், தம் பெண்களின் க்ஷேமம் கருதி இங்கிலீஷ்படித்த அல்லது படிக்கும் பிள்ளைகளுக்குக் கல்யாணம் செய்து கொடுப்பதில் "நீ முந்து நான் முந்து" என்று போட்டி போட்டுக்கொண்டு தம் பொருள் வருவாய்க் கதிகம் செலவிட வந்து விடுகிறார்களே! ஈதென்ன மௌடீகம்! இவர்களது அறியாமையால் வருந் தீங்கு கொஞ்சநஞ்சமல்ல. "இங்கிலீஷில் உயர்தர வகுப்பில் வாசிக்கிற பிள்ளைகளே இவர்க

எது நோக்கம்" என்பதைக் கண்டுகொண்ட சில வஞ்சகப்பெற்றோர்கள், தமது மூடமக்களை எப்பாடுபட்டாயினும் உயர்தர வகுப்புகளில் வாசிக்கச்செய்து, இவ்வாறு வாசிக்கும் காரணத்தால் தக்கவரன் கிடையாமல் தவிப்போரிடமிருந்து பொருள்தட்டிப் பறித்து, அப்பிள்ளைகளுக்கு மண முடித்து விடுகிறார்கள். மணமுடிந்த பின்னுட்களில் இவர்கள் படிப்பும் நிறைவேறி விடுகின்றது. இப்படி எத்தனை பேர்கள் ஏமாந்து கெட்டிருக்கின்றனர்.

தெற்கே பெரும்பாலும் உயர்தரக் கல்வியைக் கருதியும் சிறுபான்மை தம் பெண் வைதவ்ய முற்றாலும் அவள் பணக்காரியாக இருக்க வேண்டிய நோக்கம் பற்றியோ, அல்லது சுயநலமே கருதியோ கிழவர்களுக்கும், எழுத்து வாசனையறியாத பணக்கார மட்டிகளுக்கும் கல்யாணம் செய்து கொடுப்பது வழக்கமாக விருக்க, வடக்கே, உயர்தரக் கல்வி கிடையாமற்போனாலும் உயர் குலத்திலேனும், தக்க அந்தஸ்திலேனும் இருக்கும் பிள்ளைகளுக்குத் தம் பெண்ணைக்காவில் விழுந்து, மதியிழந்து, நிதியிழந்து, மானமிழந்து கல்யாணம் செய்து கொடுப்பது வழக்கமாக இருக்கிறது.

உதாரணமாக, பங்காளத்தில் "குலினர்" என்ற உயர்தர ஜாதியார் அந்தணர் வகுப்பைச்சார்ந்தவர் உளர். குலீனர் என்ற பதத்திற்கே உயர்குலத்தினர் என்பது பொருள். இக்குலீனரோடு சம்பந்தம் செய்வதே பெருங் கௌரவ மென்று எண்ணி ஏங்கித்தவித்து அவரினத்திற் பிள்ளைகள் போதுமானவர்கள் கிடையாததால் போட்டிமேல் போட்டி போட்டு பல பெண்களை அவர்களுள் ஒரு பையனுக்கே அபரிமிதமான பொருள் கொடுத்து கல்யாணம் செய்து வருகின்றனர்.

இத்தகைய வழக்கத்தால், அநேக பெண்களைப் பெற்றவர்களின் குடும்பம், வறுமைப்பிணியால் ஆயுள்பரியந்தம் வருந்தவோ, கடனுக்குள்ளாகி மானமழிந்து அல்லற்படவோ வேண்டியதாகிவிடுகிறது. சுருங்கச்சொல்லின் இன்பத்திற்குக் காரணதாரமாய் இருக்க வேண்டிய கலியாணம் பெருந் துன்பத்திற்கே ஆஸ்பதமாய் விடுகிறது.

இம்மட்டோ? முன் பின் அறியாக் குடும்பத்தில் போவிப்படிப்போ அல்லது பொருளை கருதி, மிகுந்த பொருள் நஷ்டத்துடன் பெண்களைப் பிடித்துத் தள்ளிச் சேர்ப்பதனால் விளையும் கஷ்ட நிஷ்டூரங்களை விவரித்துக் கூற யாரால் ஆகும்? இத்தகைய அந்நிய குடும்பத்தார் இருவருக்கும் பண விஷயமாய் ஏற்பட்ட பரிசயத்தைத் தவிர, உண்மை அபிமானமாவது, ஸ்வஜாதி அபிமானமாவது, பரஸ்பர மதிப்பாவது, உண்டா? இம்மியும் இருக்கக்காரணம் இல்லையே! ஆகலின் மானம், நாகரீகம், வினயம் முதலியன இவ்விரு திறத்தாரில் ஒரு திறத்தார் பால் குறைவாகப் பொருந்தி யிருக்குமாயின் எதிர் பாராத பலமனஸ்தாபங்கள் நேரிட்டு மண இன்பத்தைக்குலைத்து விடும்.

இவ்வாறெல்லாம் செய்து வருவதால் அறிவு முதிர்ந்த அநுபவசாலிகளான நம் முன்னோரது மண வினைக் கொள்கைகளைப் பாராட்டிப் பயனுறச் செய்யாமலும், வதூவரர் தகுதிகளையே ஒரு சிறிதும் கவனியாமலும் காரியங்களை முடித்து மீளா நரகிற் காளாகின்றோமே! கல்யாணமானது, ஒற்றுமை, நல்லெண்ணம், பரஸ்பர க்ஷேம லாபம் முதலியவைகளுக்குக் காரணமாக வேண்டி யிருக்க, எப்பொழுதும் அதிருப்திக்கும், கலகத்திற்கும், துன்பத்திற்கும், அவமானத்திற்கும் காரணமாக வன்றோ முடிகிறது. இத்தகைய கல்யாணம் சாஸ்திரோக்தமாக வாவது இருக்கிறதா என்றால், அதுவும் இல்லையே! அடாத முறை கேடான தொன்றாக வன்றோ இஃதுள்ளது! இதற்கு விலங்குகளின் விவாக சம்பந்தம் கூட எத்துணை மடங்கு சிலாக்கியமானது!

தக்க இன்ன, தகாதன இன்ன என்று
ஒக்க உன்னலர் ஆயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே மனுவின் நெறி
புக்கவேல், அவ் விலங்கும்புத் தேளிரே. (கம்ப ராமாயணம்.)

இதிற் சந்தேகம் யாதோ?

பல சொல்லி யென்? வரதக்ஷிணை அநாகரிக மானதும், அதி அக்கிரம மானதும், அருவருக்கத் தக்கதும், கொடுமை விளைக்கக் கூடியது மானது என்பதற்கு வடநாட்டில் அடுத்து அடுத்து நடந்த இரண்டு அதி பரிதாப மரணங்களே போதிய சான்றாகும்.

கல்கத்தாவிற்கு அருகில் உள்ள போக்ரா என்ற ஊர் ஸப்ரிஜிஸ்ட்ராருக்கு 15 வயதுள்ள சரள பாலதேவி என்ற ஓர் அழகியபெண் உண்டு. அவளது புருஷனும், மாமனும், மாமியும் அதிகமான ஸ்ரீதனம் இப் பெண் தன்னுடைய பெற்றோர் வீட்டிலிருந்து கொண்டுவர வேண்டுமென்று இப்பெண்ணை மிகவும் துன்பப்படுத்தினர்கள். பெண்ணின் பெற்றோர் அவ்வளவு செல்வவான்கள் அல்லர். ஆகவே சரள பாலதேவி வேறு வழி காணாதவளாய்த் தன் மாமன், மாமி, புருஷன் இவர்களுடைய கொடுமையை விட எமனுடைய வாதனை நலமென்று கருதி கடந்த ஞாயிற்றுக் கிழமை 1–3–14 இரவு தன்னை நெருப்புக்கு இரையாக்கி உயிர் துறந்தாள்.

நிற்க. மற்றொன்றாகிய "சுசேலதா" என்று அறியாதார் கூறும் "சிநேகலதை"யின் ஆத்மத் யாகம் நாடறிந்த விஷயம் ஆகையால் அவ்வதி விசனகரமான சம்பவத்தை இங்கு விவரிக்காமல் அவள் இறப்பதற்கு முன் எழுதி வைத்துச் சென்ற கடிதத்தின் மொழிபெயர்ப்பையும், அதினின்றும் வரதக்ஷிணை வாங்கலைப் பற்றி என் உள்ளத் துதித்த சில அபிப்பிராயங்களையும் வரைகின்றேன்.

ஸ்நேஹ லதையின் கடிதம்.

மகாகனம் பொருந்திய பிதாவே!

என் விவாக நிமித்தம் நமது வீட்டைத் தாங்கள் அடகு வைப்பது என்னால் சகிக்க முடியவில்லை. தாங்கள் அவ்வாறு செய்யவே கூடாது. அது செய்ய வேண்டிய அவசியமும் தங்களுக்கு நேராது. ஏனெனில், சூரியோதயம் ஆகுமுன், அபவேளையில் ஜனித்தவளாகிய தங்கள் பெண்ணின் சஞ்சலப் பட்டுக் கொண்டிருக்கும் ஜீவன் மோன நிலை கடந்த பரசாந்த ஸ்தலத்திற்குப் பறந்தோடிவிடும்.

அளவிலா அன்பு என்மீது தாங்கள் வைத்திருக்கிறீர்கள். இந்த அன்பெனும் அரிளங்கொடியை ஆண்மைமிகுத்த தங்கள் இதயத்தைச்சுற்றிப் படர இடந்தந்திருக்கிறீர்கள். அதி பேரன்புள்ள எனது பெற்றோர்கள் என்மீது வைத்துள்ள வாஞ்சை; ராஜகுமாரிகள் கூட கனவிலும் கண்டறியாததாகுமே! ஆதலால் "யான் பெற்ற பெரு

ந்தவப்பேறு என்னையன்றி இருநிலத்திற் பிறந்தோர்கள் யார் பெற்றுளரோ ?" இத்தகைய அன்பு வாய்ந்த தங்களுக்கு யான் செய்யும் கைம்மாறு, குடும்பம் முழுதும் குலைகுலைந்து திண்டாடித் தெருவில் அலையவும், அன்பார்ந்த தந்தையாகிய தாங்கள் ஆயுள் பரியந்தம் வறுமையாலும் வன்றுயராலும் வருந்தவும் யான் காரணமாகி நிற்றல் தானே ?

விடிந்தது முதல், ஒய்ச்சல் ஒழிவின்றி, நாள் முழுதும் வெளியே அலைந்து, திருவடிக் கமலங்கள் நோவ, இளைத்துக் களைத்துத் தாங்கள் முந்தநாள் மாலை வெகு நாழிகைக்குப் பின் வீடு திரும்பியபோது, தங்கள் திருவதனத்தைப் பார்த்தேன். கனதுக்கமும் ஏக்கமும் அதிற் கண் கூடாக விளங்கின. "எல்லாம் போய் விட்டது" என்ற படுமொழி என் காதிலேயே விழுந்தது. தங்களது ஏக்கம் குடிகொண்ட முகம் சதா சர்வ காலமும் என் எதிரில் இருந்து கொண்டிருக்கின்றது. உரைத்த மொழிகள் யாவும் கணீர் என ஒலித்த வண்ணமாகவே இருக்கின்றன. என் விவாக சம்பந்தமாகக் கொடுத்துத் தீரவேண்டிய பெருந்தொகையைக் கடனாகப் பெறுவதற்கான தங்கள் அதி சாமர்த்திய முயற்சி, 'சித்தி பெறும்' என்று தாங்கள் எவ்வளவோ நம்பி எதிர் பார்த்தும் பலிக்காமற் போன விஷயமும், வீட்டை ஸ்வாதீன ஒற்றி வைத்துப் பொருள் பெறுவதினும் வேறு வழியில்லை என்ற விஷயமும் ஆகிய இவைபோன்ற சில மனம் வெடிக்கச் செய்யும் விஷயங்களைச் செவியுற்றேன்.

தந்தையே, இவ் யோசனை என்னால் பொறுக்கக் கூட வில்லை. ஏற்கனவே, என்னிமித்தம் பல கஷ்டங்களுக்குள்ளாகிய தங்களைப் பின்னும் கவலை என்னும் கனசுமை தாங்கச் செய்வதற்குக் காரணமாக இருப்பதன்றோ எனது விவாகம்? இதைத்தவிர வேறு என்ன அது? எனக்கு இன்னும் விவாகம் ஆகாதது பற்றித் தாங்கள் கேட்டிராத வசைச் சொல்லும் உண்டோ? தக்க வரன் எனக்குக் கிடைக்க வேண்டுமென்று தாங்கள் ஆயிரம் பாடு அரும் பாடு பட்டீர்களே! அப்பாடுகள் என்ன ஆயின! யாவும் பயனற்றல்லவோ போயின. கூடவே கூடாது. தலைமுறை தலைமுறையாக என்

முன்னோர்க்குச் சொந்தமாக இருந்துவரும் வீட்டில் ஏதிலார் காலடி பட ஒருபோதும் சகியேன். அந்நியரின் பேச்சுக் குரல் கூட அதில் கேட்கக் கூடாது. என் தெய்வத் தந்தையே! எவ்வகைக் கஷ்டத்திற்கும் தாங்கள் உள்ளாகக் கூடாது. நானே என்னைத் தியாகம் செய்து கொள்ள வேண்டியவள்.

தந்தையே! பரத்வானில் படு வெள்ளம் வந்து பட்டணத்தைப் பாழாக்கிய போது பரோபகார சிந்தையுள்ள பாலிய வித்தியார்த்திகள் பலர், பரிதவித்தோர்க்குப் பரம உதவி புரியுமாறு முற்பட்டனரென்னக் கேள்விப்பட்டேன். துன்புற்றோர்க்குத் துணை நின்றுதவிய இவ்விரக்கம் நிறைந்த இதயமுள்ளோர்க்கு இறைவன் அருள் புரிவாராக. அந்நிய தேசச் சரக்குகளை வாங்குவதே இல்லையென்று எத்தனையோ வாலிபர்கள் பிரதிக்ஞை செய்திருக்கின்றனர் என்றும் கேள்வியுற்றேன். சொற்ப தினங்களுக்கு முன்புதான், நொலை தூரத்திலிருக்கும் தென் ஆபிரிக்காவிலுள்ள நம் சிலரின் கஷ்ட நிவிர்த்திக்காக பொருள் சேகரிக்கும் நிமித்தம் பெருங்குணம் படைத்த பிள்ளைகள் பலர் வீடுகள் தோறும் சென்று யாசித்தனர் என்று கூடக் கேள்விப் பட்டேனே! ஐயோ! அருகில் உள்ள "தம்" இனத்தார்க்கு இரங்கும் எவரேனும் இங்கு இலரா?

தந்தையே, நேற்றிரவு ஓர் கனவு கண்டேன்: அதுவே என்னை என் பிரதிக்ஞையைச் செய்து கொள்ளும்படி செய்தது: இதுகாறும் எவரும் என்றும் கேட்டிராததும், எவரையும் வசியஞ்செய்ய வல்லதுமான இனிய கீத நாதம் எனக்குக் கேட்டது. நீரிலேனும் நிலத்திலேனும் என்றும் நிகழாப் பெருஞ் சோதி ஒன்று அப்போது தோன்றியது. அப்பேரொளி நடுவில் வீற்றிருந்த துர்க்கை மாதா அருட் பெருவகையுடன் என்னை விண்ணகத்துள்ள இன்ப மயமான இல்லத்திற்கு வருமாறு சைகை காட்டியதைக் கண்டேன். அப்பொழுது அப்பா! தங்களையும், எனது அன்பார்ந்த தாயின் சதா சஞ்சலத்தோடு கூடிய திருமுகத்தையும், நம் வீட்டிற்கே ஓர் விளக்காக விளங்கிடும் சின்னஞ் சிறு குழந்தைகளையும் நினைத்தேன். தக்ஷணமே உங்கள் யாவர்க்கும் கஷ்ட நிவிர்த்தி செய்யத் தீர்மா

த்து விட்டேன். தேவ மாதாவின் கருணை நிரம்பிய கட்டளைப் பிர காரம், கால தாமத மின்றி வந்து விடுவதாக அவளுக்கு அறிவித்து விட்டேன்.

"நான் இறந்தகன் பின்னர், தந்தையே! நீருன என்க்கா கத் தாங்கள் கண்ணீர் விட்டுக் கரைந்து அழுவீர்கள் என்பது என் க்குத் தெரியும். நான் ஒருத்தி போய் விட்டாலும் வீடு முழு மைக்குமே விமோசனம் ஏற்படுமன்றோ? அக் கனவு கண்டது முதல், "எனது உலக யாத்திரையை நிறைவேற்றச் சரியான வழி எது? நெருப்பாலா? நீரினுலா? விஷந்தின்று?" என்று பலவாறு யோசித்து "நெருப்பே நேரிய வழி" என்று கண்டேன். நான் இடும் தீ, மூண்டு திக்குகள் தோறும் பரவி ஆங்காங்கு பெண்களை வைத்துக் கொண்டு விவாக முடிக்க வழியின்றித் தவிக்கும் தின கோடிகளின் துக்கத்தை முற்றிலும் சுட்டெரிப்பதாக.

அன்பார்ந்த தந்தையே! இதோ போய் வருகிறேன். இயாக காலம் சமீபித்து விட்டது. உலகத்துள்ள இயற்கைப் பொருள் கள் யாவும் நிச்சிந்தனையாய் இப்பொழுது நித்திரை செய்துகொண்டு இருக்கின்றன. நானும் விழிப்பு என்பதையே அறியாத நித்ய நித் திரையை அடையப் போகிறேன். இது காறும் நான் அனுபவித் தறியாத இன்ப உணர்ச்சி எனக்கு மேலிடுகிறது. இனி நான்செய்ய வேண்டிய விஷயம், என்னை அன்பாக ஆதரித்து வந்த தங்கள் மார் மேலும் தோள் மேலும் இங்கு நான் இருந்து வளர்ந்த அருமை போலு, இனி, விண்ணில் உள்ள என் புதுவீட்டில், தேவமாதாவின் திருவடிக் கமலங்களில், சுவயம்புவா யுள்ள பேரொளிக் கிடையில் இருந்து தங்கள் வரவையும் தாயார் வரவையும் எதிர் பார்ப்பதே ஆகும்.

இங்ஙனம்,

தங்கள் துர்ப்பாக்கியசாலியான பெண்,

ஸ்நேஹலதை.

ஸ்நேஹலதையின் ஆத்மத்யாகம், பங்காளத்துத் தலைவர்களைத் தம் தேசத்தின் உண்மையான நிலைமையை உணரச் செய்துள்து. ஆயினும் தற்காலச் சீர் திருத்தப் போராட்டத்தில் அவர்கள் எவ்வளவு தூரம் பிடிவாதமாய் நின்று சாதிப்பார்கள் என்பதும், தற்காலக் குடும்ப வாழ்க்கை நிலையில் அது எவ்விதப் பயனையேனும் தருமோ வென்பதும், இப்போதைக்கு விவகரித்தற்கொண்ணு விஷயங்களாக உள்ளன. "அழிவுக் கேதுவான ஆசாரங்களை அடியோடு நிர்மூல மாக்க வேண்டும்" எனக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் ஆசாரச் சீர் திருத்தக்காரர்களுக்கு, ஸ்நேஹலதையின் ஆத்மத்யாகம் போன்றவைகள் பல முறையும் பல விதத்திலும் பரம உதவி புரியக் கூடியவைகளே.

உரோம ராஜ்யத்தில்,தொன்று தொட்டு நிகழ்ந்துவந்த மரணத்திற்கேதுவான மற்போர்(Galdiators' Duel)செய்யும் வழக்கம்,இந்துபட்டொழிந்ததற்குக் காரணம்,கிருஸ்தவ குரு ஒருவரின் பிராணத்யாகமே என்று தெரிய வருகிறது.இப்புண்ணிய ஜீவகாருண்ணியர், ஓர் முறை அவ் யுத்தக் காட்சியைக் காண அங்குச் சென்றிருந்தனர். மல்லர்கள் இருவர்க்கு நிகழ்ந்த ஓர் அகோர யுத்தத்தில் உயிர்இழக்கும் அதி பரிதாப நிலையில் இருந்த ஒருவனுக்கிரங்கி, அவனைக்காப்பாற்ற வெண்ணி, அவ் யுத்தத்தை விலக்குமாறு இருவர்க் கிடையிலும் இவர் புகுந்தனராம். எவனைக் காப்பாற்ற வேண்டு மென இவர் கருதி இது செய்தனரோ, அவனாலேயே இவர்க்கு மரணம் சம்பவித்ததாம். ஐயோ! பாவம்! நிற்க.

ஆயினும் என்ன! ஒருவரைத் தமது பிராணனையும் தரும் பென மதிக்கச் செய்து, அதனை த்யாகம் செய்யத்தூண்டிய கொடுந் துன்பங்களை உள்ளபடியே சகலரும் உணர்ந்தறியச் செய்யாவிடின் இத்தகைய பரித்யாகங்கள் நிலையான பயன் ஒன்றும் அளியாமலே ஐயோ! போய்விடுமே.

ஜனசார சீர்திருத்தத்திற் கண்ணும் கவலையும் கருத்தும் வாய்ந்த சர்வ ஜன மகோபகாரிகளான சகோதரர்களே! உங்களை யான் வேண்டுவ திங்கொன்றுண்டு.

"உலகினில் உண்மையை உணர்ந்தவர் சிலரே
உணரார் உங்களை உபேகைஷிய செய்வர்.
அருட்குணத் தீர்! அதைப் பொருட்படுத் தாதீர்
இன்பதுன் பங்களை எண்ணு தேகுமின்.
மடமிகு மாந்தரின் மனஇருள் ஒழியப்
படர்நல் அறிவுச் சுடர்கொளுத் திடுமுன்
நட்புக் கொடியெனும் நல்லா ளாகிய
சிநேக லதையின் அநேக அரிய
குணங்களைத் தெளிவுறக் கூறுமின். அவளது
முடிவுக் கான முழுவிவ ரத்தையும்
ஞானிலத் தோர்கள் நன்கறிந் துணர்ந்திடச்
செய்வது நீங்கள் செய் கடனாகும்.
ஆ! ஆ! அந்த அதிபரி தாபக்
காட்சியை முதல் முதல் கண்ணுற்றோரின்
விழிக்கிலக் காகி விளங்கிய மிக்க
அதிஅற்பு தத்தை அனைவர் மனத்திலும்
படும்படி மட்டும் பகர்வீ ராயின்,
கல்மன மாயினும் கரைந்தே விடுமே
என்னே. பார்மின்! என்னே பார்மின்.
கொழுந்துவிட் டெரியும் செழுஞ்சுடர் முற்றும்
பற்றித் தன்னைச் சுற்றியும், சிறிதும்
தன்னினை வற்றுத் தரையில் விழும்வரை
* முளரியை † முளரியா முன்னினள் போல
அற்பமும் தன்மன அமைதிகுன் றாமல்
மதிமிகு சிநேக லதைஇருந் தனள்என
அவளைப் பார்த்தோர் அனைவரும் சொல்லக்
கேட்டுளோம் அன்றி, "வாட்டமுற் றிருந்தனள்"
என்ன இயம்பினோர் எவருமே இலரே!
செல்வாக் குடையீர்! சொல்வலி படைத்தும்
ஒல்வசெய் யாமை நல்வினை கோறலின்.

---

* முளரி - நெருப்பு. † முளரி - தாமரை.

வேறல ஆதலின், விழுமின்! எழுமின்!
இன்றே, இன்னே, எவரும் அறிய
இவ்விஷ யங்களைச் செவ்விதின் உணர்த்துமின்.
வன்றுயர் வளர்க்கும் வரதக்ஷிணையது
‡ பணஉருப் படைத்த + பணம்என உணர்த்துமின்.
பாழ்த்தஇவ் வழக்கம் படுத்திடும் பாடுகள்
பொருளொடும் ஒழிந்து போகிற தில்லையே!
ஒற்றுமை யுடனே உறைநம் இந்துக்
குடும்பவாழ்க் கையிற்பல கொடுமைகள் புகுந்து
வேறு வேறான விபரீ தங்களுக்
கேதுவா யிருப்பதை எடுத்துரைத் திடுமின்

விதிப்பயனை எவரும் அறிய வொண்ணாது என்னும் பலமான நம்பிக்கை ஹிந்துப் பெற்றோர்களுக்குள்ள விஷயம் எவரும் நன்கறிவர். தகப்பன் ஒருவன், தன் பெண்ணுக்குத் தக்க வரன் தேடப்பாடுபட்டும் கிடையாமற் போய் விட்டால்

"ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்
நாழி முகவாது நானாழி—தோழி
நிதியும் கணவனும் நேர்படுதல் தத்தம்
விதியின் பயனே பயன்"
"ஊழிற் பெருவலி யாவுள ? மற்றொன்று
சூழினும் தான் முந் துறும்"
"அழுதாற் பயனென்ன ? நொந்தாற் பயனென்ன ஆவதில்லை
தொழுதாற் பயனென்ன ? நின்னை சுட ஒருவன் உரைத்த
பழுதாற்பயனென்ன ? நன்மையும் தீமையும் பங்கயத்தோன்
எழுதாப்படி வருமோ? சலி யாதிரென் ஏழை நெஞ்சே.

என்று பெரியோர்களும் கூறி யிருக்கிறார்கள். நாம் விசனிக்தாவதென்ன?பெண்ணின் விதி அப்படி யிருந்தால் நாம்தான் என்ன செய்யலாம்? பாக்கிய சாலியாக வாழவேண்டு மென்று மட்டும் அவள் தலையில் எழுதி யிருக்குமாயின், அகமுடையான் ஏழையாக

---

‡ பணம் - செல்வம். + பணம் - பாம்பு.

இருந்தால் என்ன? பணக்காரனாக இருந்தால் என்ன? "இட்டமுடனே தலையில் இன்னபடியென்றெழுதி விட்ட சிவனுஞ் செத்துவிட்டானோ!" என்று சொல்லித் தன் மனைவியைத் தேற்றுவன், அன்றியும் சீரும் சிறப்பும் எய்தக் கூடிய நிலைமையில் இருந்த சிமான்களுக்கு வாழ்க்கைப் பட்டும் ஜீவதசை முழுதும் அதிர்ஷ்ட வீனர்களாய் ஆற்றொணாத் துன்பமும், அதி கேவல நிலையிலுள்ளோர்க்கு வாழ்க்கைபட்டும் அதி உந்நத நிலையுற்று ஆயுள் முழுதும் ஆனந்தமும், அநுபவித்த அநேக பெண்களின் பழங்கதைகளை நினைப்பூட்டவும் செய்வான். தன்மனைவியுடன் இவ்வாறு இவன் செய்யும் சம்பாஷணை, இவன் இதற்குச் சில மாதங்களுக்கு முன் பார்த்துப் பின்பு வேண்டாமெனத் தீர்மானித்துக் கழித் தொதுக்கிய ஒருவனுக்கே தன் பெண்ணை இனிக் கலியாணம் செய்து கொடுப்பதற்காகத் தான் கருதித் தீர்மானித்த விஷயத்தை அவளுக்கு அறிவிப்பதற்காகப் போடும் பீடிகையாகவே பெரும்பாலும் இருக்கும். இது சிலர்க்கு நூதனமாகத் தோன்றலாம்; அதிலும் ஜாதிக்கட்டுப் பாடு என்ற பெருந் தொல்லைக்குள் ளாகாதபடி தக்க காலத்திற்குள் தக்க வரனைத் தேடித் தீரவேண்டியவனும், தனக்கு மட்டும் போதிய மிதமான சொத்துள்ளவனுமான ஓர் தந்தையின் கஷ்ட நிஷ்டூரங்களை அறியாதார்க்கும், அறிய ஆற்றலும் அறிவும் இல்லாதார்க்கும், இது நூதனமாகத் தான் இருக்கும்.

உண்மை ஈதாக, சிநேக லதாவின் தந்தையைப் பாருங்கள்! இவர் போன்ற தந்தைகள் எத்தனை பேர்கள் இங்கிருக்கின்றனர்! தம் குழந்தைகளிடத்தில் எவ்வளவு தான் வாத்ஸல்யம் இருக்கட்டும். இப்பூலோகத்தில் தனக்குச் சுவாதீனமான எல்லாப்பொருள்களையும் இம்மியும் தனக் கெனக் கொள்ளாமல் தன்பெண்ணுக்குத் தக்க வரன் தேடும் விஷயமாகத் தியாகம் செய்ய எந்தத் தந்தை

யும் இவர் போல் உடன்படுவானு? தக்க வரன் கிடைப்பது கஷ்டமாயின் கிடைத்த வரனைக் கொண்டல்லவோ எவனும் திருப்தியுற்றிருப்பன். இத் திருப்தியால் எவ்வளவு விபரீதம் விளையும்! பாருங்கள்! நிற்க.

வரதக்ஷிணை யேற்பட்டால் இந்துக்குடும்ப வாழ்க்கைக்கு வேறு விதங்களிலும் துன்பமுண்டு. எங்ஙனமெனில், வரதக்ஷிணையின் தொகை எவ்வளவுக் கெவ்வளவு அதிகமோ அவ்வளவுக் கவ்வளவு மாப்பிள்ளைக்கு அதிக மதிப்பு எனக் கொண்டு, குறைந்த தக்ஷிணை கொடுத்து வாழ்க்கைப்பட்ட பெண்ணைமரியாதைக் குறைவாக நடத்துகின்றார்கள். இம்மட்டோ? ஒப்பந்தத்தொகையோடு நில்லாமல், அதனை ஒட்டிய வேறுபொருள்களின் விஷயமாகவும், பிள்ளை வீட்டுக்காரர்களால் பெண்ணுக்குப் போட வேண்டிய நகைகள் விஷயமாகவும்; பிரமாதக் குழப்பங்களும் நிர்ப்பந்தங்களும் ஏற்பட்டு விடுகின்றன. பெண்வீட்டுக் காரருக்கு சம்பந்தி தம் பெண்ணுக்குப்போடும் நகைகள் குறைந்த விலையுள்ளனவாகப் படுகின்றன. அதோடு பெரும்பாலும் அதிருப்தி உண்டாகவும் செய்கிறது. அப்பொழுது கல்யாணப் பந்தல் கலகப் பந்தலாய் விடுகிறது. மாப்பிள்ளை விரும்பினுல் மறுநாளே போட்ட யாவற்றையும் அற்ப சொற்பம் கூட மிச்சமின்றி விற்று விடலாம்.

இவ்வாறிருந்தும், தம் பெண்ணின் ஸ்ரீதனப் பொருள்கள் எங்கே போய்விடுமோ என்று அவளது பெற்றோர் வீண் ஏக்கம் கொண்டு, பின்னர் ஈனக் கிரயத்துக்கு விற்கப்பட்டாலும் படட்டும் என்று நகைகள் போடுவதிலேயே பிடிவாதமாக நிற்கின்றார்கள். கடைசியாக வேறுவகையான செலவுகளும் இக்கல்யாணத்தை யொட்டி நேருகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு வரதக்ஷிணை அதிகமோ,

அவ்வளவுக்கவ்வளவு பெண்வீட்டுக்காரன் பெரும் பொருள் செல விட்டுக் கல்யாணத்தைசிறப்பாக நடத்துவன் என்றும் எதிர்பார்க் கிறார்கள். வரதக்ஷிணைக் கேற்ப, தக்க பெருந்தொகை தக்ஷிணை யாகத் தமக்கும் கிடையா விட்டால் புரோகிதர்களுக்குக்கூட அதி ருப்திதான். பந்துஜனங்கள் பலரைப்படைத்த பெற்றோர் விஷய மாக இச்செலவுகள் தொகை வகை சொல்ல முடியாமல் ஏறிவிடு கின்றன. இவ்விரண்டாம் வகையாலும் பணத்தைச் செலவிடாததி னிமித்தம் எத்தனை மணப்பந்தல்கள் குதூகுலம் குலைந்தொழி கின்றன.

வரதக்ஷிணை வாங்கல் என்னும் தீய வழக்கத்தை அறவொழிக் கப் பல்வித யோசனைகள் சென்ற சில வாரங்களாகச் செய்யப்பட்டு வருகின்றன. வங்காளத்தில் வாலிபர் தாம்வரதக்ஷிணையே வாங்கு வதில்லை யென்று வாக்குறுதி செய்துளார்கள். இப்பிரதிக்ஞை நிறைவேறுமென நான் முழு உறுதியாகச் சொல்ல முடியாது. ஏனெனில் இவ்விஷயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அப்பிள்ளைகளாக மட்டும் இருப்பின் இது சித்திபெறினும் பெறலாம். ஆனால் அவர் களுடைய பெற்றோர்கள் அப்பிள்ளைகளின் வாக்குறுதியை அங்கீகரி க்க மறுத்துவிடக்கூடும். அப்பிள்ளைகளின் கல்யாண காலத்தில், தாம், அவர்கள் மாமனாராக இனி ஆவோரிடமிருந்து வட்டிக்கு வட்டி சேர்த்து வரதக்ஷிணையாக வாங்கிவிடலாம் என்ற நம்பிக்கை கொண்டே, தமது பெருந்தொகையை இப்பொழுது அப்பிள்ளைக ளின் சகோதரிகளின் கல்யாண விஷயமாகச் செலவழித்தாக வேண் டியிருக்கிறதென, அப்பிள்ளைகள் மனதில் ஊன்றிப்பதியுமாறு அவர் கள் நன்கெடுத்துரைப்பாராயின், அப்பிள்ளைகளும் ஆக்ஷேபம் ஏது ங்கூறாமல் இணங்கவே இணங்குவர். கல்கத்தாவில் சுதேச பாஷை யில் பிரசுரமாகும் "நாயகம்" என்ற பத்திரிகை ஓர் ஹிதமான யோசனை கூறுகின்றது. அதன் நல்யோசனையைக் கவர்ன்மெண்

டார் அங்கிகரித்து மேல் நடத்துவராயின் வரதக்ஷிணையால் விளையும் தீங்குகள் பரிகரிக்கப்படலாம். அது "வரதக்ஷிணை வாங்கும் மாப்பிள்ளை, அது வாங்கியது முதல் அவனுடைய மாமனாரின் பொருளாகவே மதிக்கப்பட வேண்டும். அவன் சம்பாத்தியம் யாவும் அப்பெண்ணுக்கோ அல்லது அவள் தந்தைக்கோ சேரவேண்டுமே யன்றிச் சிறுதுரும்பும் அப்பையனின் தகப்பனைச் சேரக்கூடாது" என்று வற்புறுத்துகின்றது. இச்சூட்டம் மாப்பிள்ளைகளே வரதக்ஷிணை கேட்பார்களானால் அதைத்தடுக்க முடியாவிடினும், வரதக்ஷிணை முதலியஎவ்வகை ஸ்ரீதனமும் வாங்காதொழிக்க அவர்கள் பெற்றோரைச் செய்து விடுமன்றோ? ஆயினும் என்னசொல்லியும் என்ன? துரைத்தனத்தாரோ இவ்வாறு செய்யத்தான் வேண்டுமென விதிக்கப் போவதில்லை. ஆதலின் இதன் குணாகுணங்களைப் பற்றி விஸ்தரிப்பதெல்லாம் அப்பிரயோஜனமான காரியமே.

ம. கோபாலகிருஷ்ணையர்.
மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்து
அக்ராஸநாதிபதி.

நன்மொழி.

12. மதுகரங்கள், புஷ்பங்களின்மேல் உட்கார்ந்து அவைகளைக் கொஞ்சமேனும் கசக்கிச் சேதப்படுத்தாமலும், சுகந்தத்தையும் மநோக்ஞமான வர்ணங்களையும் கொஞ்சமேனும் பழுதாக்காமலும் இனிய தேனைக் கிரஹிக்குமாறு போல, ஒரு ஞானியானவன் தன பரிஜனங்களிடத்தில் நடைபெறுவான்.

13. கெட்டிமெத்தை வீட்டில் எவ்வளவு மழைபெய்தாலும் ஜலம் எப்படி ஒழுகமுடியாதோ அப்படியே திடசித்தனின் ஹிருதயத்தில் தீய எண்ணங்கள் உட்புகா.

14. ஞானி யென்பவர் தம்மிடமுள்ள ஆசுரஸம்பத்துக்களைத் தாழ்த்தி தெய்வீக ஸம்பத்துக்களைப் பெருக்கிக் கொள்பவரேயாம்.